# 1. பொருளாதாரச் செயலாற்றம் பிரச்சனைகளும் கொள்கைகளும்

## 1.1 பொதுநோக்கு

1930களின் பெருமளவிலான பொருளாதார மந்த நிலைமைக்குப்பின்னர் முழு உலகமும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை அனுபவித்த பொருளாதார உறுதிப்பாடு பெருமளவில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டுச் சூழல் ஒன்றில் 1998இல் இலங்கையின் பொருளாதாரச்செயலாற்றம் மதிப்பிடப்பட வேண்டியுள்ளது. 1997 இன் நடுப்பகுதியிலிருந்து உலக நிதியியல் சந்தைகளும் செலாவணிச் வீதங்களும் பெருமளவில் உறுதிப்பாடின்றிக் காணப்பட்டன. கிழக்காசிய நிதியியல் சந்தை நெருக்கடியானது உடனடியான தொடர்த் தாக்கங்களையும் உலகப் பொருளாதாரத்தில் குறிப்பாக நிதியியல் மற்றும் பண்டச் சந்தைகளில் பலகாலம் நிலைத்திருக்கக் கூடிய பாதகமான எதிர் விளைவுகளையும் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து உருவான ருசியாவின் கொடுப்பனவு மற்றும் நாணய நெருக்கடியும் தென்னாபிரிக்கா, பிரேசில் மற்றும் ஏனைய பல இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளும் உறுதிப்பாடின்மையைத் தீவிரப்படுத்தின. இதற்கு மேலதிகமாக நிதியியல் நெருக்கடிகளுக்கு உள்ளான நாடுகளில் தமது பாரிய ஈடுபாடுகளின் காரணமாக சில முன்னணி சர்வதேச வங்கிகளினதும் முதலீட்டு நிதியங்களினதும் உறுதிப்பாடு தொடர்பாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது. இதே வேளையில், யப்பானியப் பொருளாதாரம் தொடர்ந்தும் கடுமையான நிதியியல் நெருக்கடிகளுடன் போராட வேண்டியிருந்தது. உலகளாவிய அத்தகைய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடியானது பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தினதும் கொடுப்பனவுகளினதும் ஒழுங்கு முறையான மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள ஏனைய நிறுவனங்கள் என்பனவற்றின் மூலவளங்களைக் கட்டுப்படுத்தியது. பல நாடுகளின் நிதியியல் முறையினை எளிதில் பாதிக்கக் கூடிய கம்பனிகளின் கட்டுப்பாடு, ஒழுங்கு முறைப்படுத்தும் வரைச் சட்டம் மற்றும் கண்காணிப்புத் தரங்கள், நிதியியல் மற்றும் வாணிப தொழில் முயற்சிகளைக் கொண்டு நடத்துவதில் அரசாங்கத்தின் அதிகூடிய ஈடுபாடு, நேரத்துக்குத்தகவல் பெறப்படாமை மற்றும் அரசியல் உறுதிப்பாடின்மை போன்ற குறைபாடுகளையும் இந்த நெருக்கடி வெளிப்படுத்திக் காட்டியது. நெருக்கடிக்குள்ளான பல நாடுகளில் நிதியியல் நிறுவனங்கள் பலவற்றை மூடவேண்டியிருந்ததுடன் சிலவற்றை பொது நிதியங்களினால் மீளமைப்புச் செய்யவேண்டியும் இருந்தது. உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்கள் கணிசமான அளவில் மெதுவடைந்ததோடு நிதியியல் கொள்கைகள் இறுக்கமாக்கப்பட்டன. தொடக்கத்தில் செலாவணி வீதங்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி வட்டி வீதங்கள் உயர்த்தப்பட்டன. பல ஆசிய நாடுகளின் நெருக்கடிக்குப் பின்னான மீட்சியைப் பாதிக்கக்கூடிய வகையில் போட்டித் தன்மையினை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு சீனா தனது நாணயத்தினை மதிப்பிறக்கம் செய்வதற்குக் கட்டாயப்படுத்தப்படுமா என்ற ஊகமும் தொடர்ந்து காணப்பட்டது. நெருக்கடிக்கு உள்ளான பல நாடுகள் பன்னாட்டு நம்பிக்கையை மீள நிறுவுவதற்கான நோக்கில் மிகக் கடுமையான ஆனால் அத்தியாவசியமான வழிமுறைகளை மேற்கொண்டன. எல்லாமாக உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சி 1997 இன் 4.3 சதவீத வளர்ச்சியிலிருந்து 1998 இல் 2.5 சதவீதத்திற்கு அரைவாசிக்கும் மேலாக வீழ்ச்சியடைந்து உலக வர்த்தகத்தின் வளர்ச்சியின் 70 சதவீத சுருக்கத்துக்கு இட்டுச் சென்றது. 1998இல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான கடனை உருவாக்காத மூலதனப் பாய்ச்சல்கள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய மூலதனப் பாய்ச்சல்களும் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. உலக பண்ட மற்றும் நிதியியல் சந்தைகளில் இந்த உறுதிப்பாட்டின்மையுடன் குறிப்பாக முக்கிய நாணயங்களின் செலாவணி வீதங்களின் அசைவுகளும் பெருமளவு மாறுபடும் தன்மையினைக் கொண்டிருந்ததுடன் இலங்கை போன்ற பெருமளவு திறந்ததும் சிறியதுமான பொருளாதாரங்களுக்கு சார்பு ரீதியில் செலாவணி வீதம் மற்றும் நாணயக் கொள்கை என்பனவற்றின் முகாமைத்துவத்தை பெருமளவு அறைகூவலைக் கொண்ட பணியாக மாற்றியமைத்தன. குழப்பம் மிக்க நிலைமையொன்றில் அதனை எதிர்த்துப் போராடுவதானது பெறுபேறொன்றாக அமைந்ததுடன் 1930களின் பின்னர் எதிர் கொள்ளப்பட்ட மிகப் பெரிய நெருக்கடிக் காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் நியாயமான முறையில் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது எனக் கருத இடமுண்டு.

1998இல் இலங்கை 4.7 சதவீத மிதமான பொருளாதார வளர்ச்சியினை எய்தியதோடு இது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. பல நாடுகள் மெதுவானதும் எதிர்க்கணியமானதுமான வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ள சூழலொன்றில் இது மெச்சத்தக்க தொன்றாகும். முன்னைய ஐந்து ஆண்டுகளின் சராசரி வளர்ச்சியான 5.6 சதவீதத்தினைவிட இது குறைவானதாகக் காணப்பட்டபோதும் 1998இல் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட 2.8 சதவீதத்துடன் இது சாதகமான

## அட்டவணை 1.1
## தெரிந்தெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| விடயம் | 1980-89 | 1990-94 சராசரி | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ. (உண்மை) வளர்ச்சி வீதம் | 4.2 | 5.3 | 5.6 | 5.5 | 3.8 | 6.3 | 4.7 |
| மொ.உ.உ. உட்கிடை | 11.8 | 12 | 9.30 | 8.4 | 12.1 | 8.6 | 8.4 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ரூபாய்கள் | 9,608 | 25,148 | 32,414 | 36,869 | 41,940 | 47,988 | 54,035 |
| மொ.உ.உ. (பெயரளவு) தலைக்குரிய, ரூபாய்கள் | 362 | 515 | 656 | 719 | 759 | 816 | 837 |
| தொழிலற்றோர் வீதம் சதவீதம் | வி.கி. | 14.4 | 12.1 | 12.0 | 11.1 | 10.3 | 9.1 |
| வெளிநாட்டுச் சொத்துக்களை அடக்கிய இறக்குமதி, மாதங்கள் | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | வி.கி. | வி.கி. | 7.2 | 6.6 | 6.0 | 6.4 | 5.9 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | 1.8 | 3.6 | 5.1 | 4.7 | 4.3 | 4.2 | 4.0 |
| | | | மொ.உ.உ.இன் சதவீதமாக | | | | |
| மொத்த உள்நாட்டு முதலீடு | | | | | | | |
| மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 26.2 | 24.1 | 27.0 | 25.7 | 24.2 | 24.3 | 25.4 |
| வெளிநாட்டுச் சேமிப்புக்கள் | 12.9 | 14.4 | 15.2 | 15.3 | 15.3 | 17.3 | 18.9 |
| | 13.3 | 10.3 | 11.8 | 10.4 | 8.9 | 7.0 | 6.5 |
| சென்மதி நிலுவை, நடைமுறைக் கணக்கு | | | | | | | |
| வரவு செலவுத் திட்டம், நடைமுறைக் கணக்கு | -8.1 | -6.3 | -7.3 | -6.0 | -4.9 | -2.6 | -1.8 |
| வரவு செலவுத் திட்டம், திரண்ட நிலுவை | 2.7 | -1.7 | -3.4 | -3.1 | -3.8 | -2.2 | -2.6 |
| | -12.4 | -9.8 | -10.5 | -10.1 | -9.4 | -7.9 | -9.2 |
| பண நிரம்பல் ($M_{2b}$), சதவீத மாற்றம் (ஆ) | | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் சதவீத மாற்றம் | வி.கி. | வி.கி. | 18.7 | 21.1 | 11.3 | 15.6 | 13.2 |
| செலாவணி வீதம் (ரூ./ஐஅடொ) சதவீத மாற்றம் | 12.8 | 13.1 | 8.4 | 7.7 | 15.9 | 9.6 | 9.4 |
| | -9.1 | -4.4 | -0.8 | -7.5 | -4.7 | -7.1 | -9.6 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வெளிநாட்டு நாணய வங்கித் தொழிலை உள்ளடக்கிய திரட்டிய பண நிரம்பல்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முறையில் ஒப்பிடத்தக்கதாகும். மேம்பட்ட வழங்கல் நிலைமைகள், பண நிரம்பலின் வளர்ச்சிவீதம் மெதுவடைந்தமை, உலக சந்தையில் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்த இறக்குமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக 1998 இல் பணவீக்க வீதம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. பண நிரம்பல் வளர்ச்சியினதும் நேர் உயர் உண்மை வட்டி வீதங்களினதும் மெதுவடையும் தன்மையானது விலைகளின் மீதான கேள்வி அழுத்தத்தினைக் குறைத்தன. கோதுமை, மசகெண்ணெய், வளமாக்கிகள் மற்றும் சீனி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதி விலைகளின் கடுமையான குறைப்பானது 1998இல் ரூபாவின் பெறுமானத்தேய்வின் மத்தியிலும் இந்த விடயங்களின் உள்நாட்டு விலைகள் உயர்வடையாது தடுத்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியினால் அளவிடப்பட்டவாறான ஆண்டுச் சராசரி பணவீக்கம் 1997இன் 8.6 சதவீதத்திலிருந்து 8.4 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரிப்பு வீதத்தின் கடுமையான குறைப்புடன் நுகர்வோர் விலைகள் 7- 9 சதவீதத்தினால் அதிகரித்தன. தயாரிப்பு, கட்டடவாக்கம் வர்த்தகம், உணவகம் மற்றும் ஏனைய முறைசாராத் துறைகளில் தொழிலாளர் அதிகளவில் ஈர்த்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தொழில் வாய்ப்பின்மை வீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. சென்மதி நிலுவையில், வர்த்தகப் பற்றாக்குறை அதிஉயர் தேயிலை விலைகளின் காரணமாகவும் இறக்குமதி விலைகளின் வீழ்ச்சியின் காரணமாகவும் வீழ்ச்சியடைந்தது. தனியார் மாற்றல்களின் தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் குறைவான வர்த்தகப் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையும் 1997 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது 2.6 சதவீதத்திலிருந்து 1998இல் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொலைத் தொடர்பு மற்றும் வலு ஆகிய துறைகளில் 1998இல் முக்கிய தனியார் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் பல தமது தொழிற்பாட்டைத் தொடங்கியமையினால் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 150 மில்லியனுக்கு அதிகரித்தன. இவை ஏனைய துறைகளுக்கான உட்பாய்ச்சலுக்கு மேலதிகமானவையாகும். மொத்தச் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 37 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவு செய்தது. வெளிநாட்டு ஒதுக்குகள் நியாயமான அளவு திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டதோடு 5.9 மாதங்களின் இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டன. மொத்த அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகள் நான்கு மாதங்களின் இறக்குமதிகளை

உள்ளடக்குவதற்குப் போதுமானதாகக் காணப்பட்டன.

பெருமளவு உயர்வான பாதுகாப்புச் செலவுகள், கூலிச் செலவின் அதிகரிப்பு, இழப்புக்களை உருவாக்கும் அரசதுறை நிறுவனங்களுக்கான மாற்றல்கள், 1997 மற்றும் 1998 வரவு செலவுத்திட்டங்களில் வழங்கப்பட்ட அதிகூடிய வரிச்சலுகைகளின் காரணமாக வரி வருவாய்களின் கணிசமான குறைப்பு, பொருட்கள் பணிகள் வரிக்காக நிர்ணயிக்கப்பட்ட உச்ச வீதத்துக்குக்குறைவான வரிவீதம் ஆகியவற்றின் காரணமாக இறைச் செயலாற்றம் பின்னடைவொன்றினைக் காட்டியதோடு மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 1997இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9 சதவீதத்திலிருந்து 1998இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. பாதகமான வெளிநாட்டுச் சூழல் மற்றும் விரிவுத்தாக்கம் கொண்ட அரசிறை வெளிப்பாடு என்பனவற்றின் மத்தியில் முன்னைய ஆண்டினைப் போலவே 1998 இலும் இலங்கையின் நிதியியல் சந்தை சார்பு ரீதியில் உறுதியாகக் காணப்பட்டது. செலாவணி வீதம் நெகிழ்ச்சியுடன் முகாமைப்படுத்தப்பட்டமை, சந்தையில் வட்டி வீதங்களை சிறிதளவு மட்டுமே அதிகரிக்கச் செய்த இறுக்கமான நாணயக் கொள்கைகள் தொடரப்பட்டமை, நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வலுப்படுத்தப் பட்டமை என்பனவே இதற்கான முக்கிய காரணமாகும்.

அதியுயர் இறைப் பற்றாக்குறையின் நோக்கில் குறைந்து செல்லும் பணவீக்க அழுத்தத்துக்கு உடன்பாடான வகையில் வட்டி வீதங்களின் குறைப்புக்கு அனுமதிப்பதற்காக 1998இல் நாணயக் கொள்கையில் மேலும் தளர்த்தல் ஒன்றினை மேற்கொள்ளுவது சாத்தியமாகவில்லை. இதற்கு மாறாக, பற்றாக்குறை நிதியிடலுக்காக அரசாங்கத்தினால் உள்நாட்டு

வரைபடம் 1.1

**தெரிந்தெடுக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள்**

வரைபடம் 1.1.1

பொருளாதார வளர்ச்சி




வரைபடம் 1.1.2

நுகர்வோர் விலைகள்



மூலவளங்கள் உயர்ந்தளவில் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக அரசாங்க படுகடன் கருவிகளினதும் முதன்மைக் கடன் வழங்கலினதும் வட்டி வீதங்களின் விளிம்புகள் ஓரளவு மேல் நோக்கிக் காணப்பட்டன. நாணயக் கொள்கையின் மேலும் தளர்த்தலானது விலை உறுதிப்பாட்டிலும் செலாவணிச் சந்தையிலும் பாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடும். மொத்தப் பற்றாக்குறையின் நியதிகளில் முன்னைய ஆண்டில் காணப்பட்ட மெச்சத்தக்க முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் 1998இன் இறைச் செயலாற்றம் பின்னடைவினைக் கொண்டிருந்த போதிலும் குறிப்பாக வரிமுறை, படுகடன் முகாமைத்துவம் மற்றும் அரச தொழில் முயற்சி சீராக்கம் என்பன தொடர்பான அமைப்பு முறைச் சீராக்கத்தில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. எனினும், பாதுகாப்புத் தொடர்பான செலவினங்களின் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக எதிர்வரும் ஆண்டுகளில் அமைப்புச் சீராக்கங்களை வலுப்படுத்த வேண்டிய தேவையை அது வலியுறுத்தியது.

## 1.2 வெளியீடு

### பொருளாதார வளர்ச்சி

1998இல் அடையப்பட்ட 4.7 சதவீதமான பொருளாதார வளர்ச்சியானது ஏறத்தாழ 5 சதவீதம் கொண்ட வரலாற்று ரீதியான நீண்டகால சராசரி வளர்ச்சி வீதத்திற்கு பெரும்பாலும் சமமாக விளங்கியதுடன் இது மிகக் கடுமையான உலகளாவிய மந்த நிலைமைகளின் கீழ் இலங்கையின் பொருளாதாரத்தின் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றலைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. 1980-1989 காலப்பகுதியில் சாதகமாக இருந்த 1990-97 காலப்பகுதியில் இது 5.4 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கையின் சில ஏற்றுமதிகள் மீது முக்கியமாக இறப்பர், தெங்கு உற்பத்திப் பொருட்கள் பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் மீது கடுமையான பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்த உலகளாவிய மந்த நிலைமைகளுக்கிடையிலும் இவ்வளர்ச்சி அடைப்பட்டது.

நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி மூலவளங்களின்மீது ஏற்றுமதிகளின் மெதுவான போக்கு கொண்டிருந்த பாதகமான தாக்கம் அத்தியாவசியமான பண்டங்களின் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளினால் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டது. எனினும் பாதிக்கப்பட்ட துறைகள் சில இம் மந்தத்தினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இறப்பர்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் அளவிடப்பட்ட இத்துறைக்கான பெயரளவு வருமானம் 1997இன் இதையொத்த வீழ்ச்சியைத் தொடர்ந்து 1998இல் 21சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1998இல் இறப்பர்த் துறையின் உண்மையான வெளியீடு 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கிழக்காசிய நெருக்கடியின் காரணமாக விலைப் போட்டியினாலும் 1997இன் மோசமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கத்தின் விளைவாக உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் பாதிக்கப்பட்ட தெங்குத்துறை இறப்பர் தவிர்ந்த எந்தவொரு துறையிலும்பார்க்க உண்மை வருமானத்தின் மிகக் குறைந்த வளர்ச்சியைக் கொண்டிருந்தது. தெங்குத்துறையில் ...

பட்டைதீட்டும் கைத்தொழிலும் கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் பெயரளவு வருமானங்களில் மெதுவான வளர்ச்சியையே (5 சதவீதம்) கொண்டிருந்தது. கைத்தொழில்துறையின் வளர்ச்சி வீதமும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 1998இன் பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்தது.

1998இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.1,015 பில்லியன்களுக்கு 13.3 சதவீதத்தினால் அதிகரித்தது. மதிப்பிடப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகையான 18,772 மில்லியனுடன் 1998இல் தலைக்குரிய பெயரளவு வருமானம் 1997 இன் ரூ.47,988 (ஐ.அ.டொலர் 814) இலிருந்து ரூ.54,035 (ஐ.அ.டொலர் 837) இற்கு அதிகரித்தமையை இது எடுத்துக் காட்டியது. வருமானத்தின்படி நாடுகளின் உலக வங்கிப் பகுப்பாய்வில் "தாழ்ந்த வருமான" தொகுதியிலிருந்து உயர்வடைந்து தற்பொழுது இலங்கை "தாழ்ந்த நடு வருமான" நாடாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியில் இந்தோனேசியா, பிலிப்பைன்சு, தாய்லாந்து, சீனா, மாலைதீவு ஆகிய சில ஆசிய நாடுகளும் காணப்படுகின்றன. அடுத்த பிரிவான "உயர் நடு வருமான" தொகுதியிலுள்ளவர்களின் தலைக்குரிய மொ.தே.உற்பத்தி ஐ.அ.டொலர் 3,116 - 9685 கொண்ட வீச்சிற்குள் காணப்படுகின்றது. அடுத்த பத்தாண்டு காலத்தில் உயர் நடு வருமானம் கொண்ட அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக மாறுவதற்கு இலங்கை அதன் ஆண்டு பொருளாதார வளர்ச்சியை 8.5 சதவீதமான உறுதியான நிலையில் பேணுவது அவசியமாகும். பொருளாதார வளர்ச்சியில் காணப்பட்ட அண்மைய மெதுவான போக்கு, உலகப் பொருளாதாரத்தின் வாய்ப்பற்ற தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் இதனை அடைவது சாத்தியமானதல்ல. இலங்கை இன்னும் சில காலத்திற்கு "தாழ்ந்த நடுத்தர வருமான"வகையின் கீழ் இருந்தாலுங்கூட அதன் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு மூலவள தேவைப்பாடுகள் அனைத்தையும் ஈடு செய்வதற்கு, குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வெளிநாட்டு உதவிகள் வீழ்ச்சியடைந்து வருகின்ற ஒரு சூழலில் சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள இயலும் போலத் தோன்றவில்லை. உள்நாட்டு முதலீட்டு விகிதம் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு சரியான நேரத்தில் உயர்த்தப்படுமாயின் ஏறத்தாழ 7 சதவீதமான பொருளாதார வளர்ச்சியைப் படிப்படியாக அதிகரிப்பது சாத்தியமாகலாம். சேமிப்பு வீதங்களில் உண்மையில்

**அட்டவணை 1.2**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி (ஆண்டு சதவீத மாற்றம்)**

| விடயம் | 1980-89 சராசரி (அ) | 1990-96 சராசரி (அ) | 1997 (ஆ) | 1998 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. விவசாயமும் காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 2.3 | 2.2 | 3.0 | 2.5 |
| 1.1 விவசாயம் | 2.3 | 2.2 | 2.9 | 1.8 |
| தேயிலை | 0.3 | 4.4 | 7.1 | 1.1 |
| இறப்பர் | -2.7 | 0.9 | -5.4 | -9.0 |
| தெங்கு | 3.1 | 0.8 | 3.3 | -3.2 |
| நெல் | 1.4 | 0.8 | 11.2 | 18.3 |
| ஏனையவை | 4.6 | 3.5 | 0.5 | -1.5 |
| 1.2 காட்டுத்தொழில் | 3.3 | 1.5 | 1.3 | 1.2 |
| 1.3 மீன்பிடித்தொழில் | 2.7 | 2.9 | 5.0 | 8.3 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 6.3 | 3.3 | 3.8 | -5.4 |
| 3. தயாரிப்பு | 5.5 | 8.6 | 9.1 | 6.3 |

வற்றிலிருந்து கிடைத்தன. நெல் துணைத்துறையிலிருந்தான 12 சதவீதப் பங்களிப்பு மற்றும் ஏனைய வேளாண்மைத் துறைகளின் பொதுவான எதிர்க்கணியப் பங்களிப்பு என்பனவற்றின் காரணமாக வேளாண்மைத துறையின் பங்களிப்பு 7 சதவீதமாக இருந்தது. தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகள் பொருளாதாரத்தில் தொடர்ந்தும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

## தயாரிப்பு

1998இல் தயாரிப்புத்துறை 6.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 1997 இன் 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவு மெதுவான போக்கைக் கொண்டிருந்தது. பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள், சீமெந்து, கட்டடப் பொருட்கள், கோதுமைமா, விலங்குத்தீன், வெறியக் குடிவகை, பால் உற்பத்திப் பொருட்கள், மருந்தாக்கற் பொருட்கள், குடிபானம், மற்றும் இரசாயனங்கள் போன்ற உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்களின் வலுவான செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேயிலை, இறப்பர், மற்றும் தெங்குப் பதனிடல் தவிர்ந்த தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு 1997 இன் 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின. மீன் உற்பத்திப்பொருட்கள் இறப்பர், மற்றும் மட்பாண்டம் ஆகியன உயர்ந்த சாதகமான வளர்ச்சி வீதத்தினைப் பேணிய வேளையில், வைரங்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. முன்னணிக் கைத்தொழிலான புடவைகளும், ஆடைகளும் அதிகரித்த உலகளாவிய போட்டியின் காரணமாக ஆண்டின் பின்னரைப்

என்பனவற்றிற்கு மத்தியிலும் கைத்தொழில் துறையில் வளர்ச்சி எய்தப்பெற்றது. மந்தமடைந்த உலகச் சந்தை நிலைமைகளின் காரணமாக ஏற்றுமதி நாடுகளுக்கிடையிலான போட்டி தீவிரமடைந்தது. இலங்கை ரூபா விரைவாக தேய்வடைந்தமையும் (கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட 5-6 சதவீத ஆண்டுத் தேய்வுகளுடன் ஒப்பிடுகையில் 9.6 சதவீதம்) கைத்தொழில் துறைக்கு ஓரளவு உதவியது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சித்தன்மை பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், ஆபரணங்கள், மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதிக்கான கேள்வியை மந்தமடையச் செய்தது. சில ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் தொடர்ந்தும் நியாயமான செயலாற்றத்தினைக் காட்டியமைக்கு, தரமான உற்பத்தியிலும் நம்பகமான வழங்கல் மூலங்களிலும் கவனம் செலுத்தும் முக்கியமான வாங்குனர்கள் இலங்கைத் தயாரிப்பாளர்களுக்கு தொடர்ந்தும் கட்டளைகளை வழங்கியமையே காரணமாகும். எனினும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்துறையின் பொதுவான வீழ்ச்சிப் போக்கினை தவிர்க்க முடியவில்லை.

கைத்தொழில்களில் மேம்பட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான இறை ஊக்குவிப்புக்கள், முதலீட்டுச் சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான ஏற்பாடு, புடவை இறக்குமதிகளின் தாராள மயமாக்கல் என்பனவற்றை உள்ளடக்கிய கொள்கை வழிமுறைகளுடன், கடந்த கால உயர்ந்த வீதங்களுடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களும் சேர்ந்து கைத்தொழில் வளர்ச்சியில் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. தொழில்நுட்ப நன்மைகள், புதிய முதலீடுகள் மற்றும்

செலவுத் துறைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக தொழிற்சாலைக் கைத்தொழில்களில் விலைச் சுருக்கி 8.4 சதவீதங்கொண்ட திரண்ட மொ.உ.உற்பத்திச் சுருக்கியுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும் இத்துறையின் போட்டித் தன்மையின் மேம்பாடு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலிருந்தே முக்கியமாகப் பெறப்பட வேண்டும். உரிய நேரத்தில் பொறித் தொகுதிகளையும், மனித தேர்ச்சிகளையும் தரமுயர்த்துவதற்குப் புறம்பாக, வீதிகள் மற்றும் போக்குவரத்து முறைகள், துறைமுக வசதிகள், மற்றும் தொடர்பூட்டல் வலையமைப்புக்கள் ஆகியவற்றை மேலும் அபிவிருத்தி செய்வது இத்துறை யின் விரைவான வளர்ச்சிக்கு அவசியமானதாகும். தொழிலாளர்களின் கேள்விக்கும் வழங்கலுக்குமிடையி லான பொருத்தப்பாடின்மை, தொழிலாளர் சந்தையில் காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மை என்பன விரைவான கைத்தொழில் விரிவாக்கத்திற்கு தடையாகவுள்ளன.

## வேளாண்மை

வேளாண்மைத்துறையின் உண்மையான உற்பத்தி 1997இன் 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998 இல் 2.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக நெற் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பு கணிசமாக அதிகரித்தமையும் உயர்ந்த விளைச்சலும் நெல் உற்பத்தி 20 சதவீதத்தினால் அதிகரிக்க உதவின. மேம்பட்ட உற்பத்தி மட்டங்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரு போகத்திலும் காணப்பட்டன. 1997இன் வரட்சியிலிருந்து ஓரளவு மீட்சியடைந்தமையைத்

நெருக்கடி உலக தேயிலை வழங்கல்களில் குறிப்பாக கென்யாவின் தேயிலை உற்பத்தி (30 சதவீதம்) மீட்சியடைந்தமையைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை என்பனவற்றின்காரணமாக தேயிலை விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. இந்தியாவின் தேயிலை உற்பத்தி அதிகரித்தமையும் விலைகளின் மீது கீழ் நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தியது. சராசரியாகப் பார்க்கையில், தேயிலையின் கொழும்பு ஏலவிலைகள் 13 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி விலைகள் 17 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் நியதிகளில் 7சதவீதம்) அதிகரித்தன. 1998இல் இலங்கைத் தேயிலையில் 40 சதவீதம் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்திற்கும் துருக்கிக்கும், ஐக்கிய அரபு எமிறேட்சிற்கும் சென்றன. ருசிய வாங்குனர்கள் ஏற்றுமதி உண்டியல்களைத் தீர்ப்பனவு செய்யாமையின் காரணமாக தேயிலை ஏற்றுமதியாளர்கள் இடர்பாடு களை எதிர் நோக்கினர். 1998இன் பின்னரைப்பகுதியில் ருசியாவிற்கான தேயிலை ஏற்றுமதிகள் முன்னரைப் பகுதியின் 25 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 14 மில்லியன் கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தேயிலை உற்பத்தியின் சராசரிச் செலவு கி.கிறாமிற்கு ரூ.107 இற்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலைத்துறையின் நாளாந்தக் கூலி வீதம் நாளொன்றிற்கு ரூ.83 இலிருந்து ரூ.101 இற்கு அதிகரித்தமையே 1998இல் செலவு அதிகரித்தமைக்கான முக்கிய காரணமாகும். இலங்கை உலகின் மிகப் பெரிய தேயிலை ஏற்றுமதி நாடு என்ற அதன் நிலையை 1998இலும் பேணியது.

இறப்பர் உற்பத்தி 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, 1996ஆம் ஆண்டு தொடக்கம்

அதிகரித்தமையானது ஊக்கமளிக்கும் போக்காக இருந்தது. 1998 இல் மொத்த இறப்பர் உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கு உள்நாட்டுக் கைத்தொழில்களினால் பயன்படுத்தப்பட்டது.

தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, 1997 இல் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கங்களே பெருமளவு காரணமாகும். எனினும் 1998இன் பின்னரைப்பகுதியில் உற்பத்தியின் மீட்சிக்கான சில அறிகுறிகள் அவதானிக்கப்பட்டன. உலர்த்திய தேங்காய்த்துருவலின் உற்பத்தி 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் எண்ணெய் உற்பத்தி 16 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், இனிப்பு வகை மற்றும் பிஸ்கட் தயாரிப்பு போன்ற உள்ளூர்க் கைத்தொழில்கள் தெங்கு உற்பத்திகளைப் பயன்படுத்தியமையின் காரணமாக அண்மைக் காலத்தில் தெங்கின் உள்ளூர் நுகர்வும் அதிகரிக்கின்றது. உடன்காய்களின் விலைகள் ஆண்டு முழுவதும் உயர்வாக இருந்தமைக்கு பொதுவான வழங்கல் தடைகளே காரணமாகும்.

மிளகு, கொக்கோ, கோப்பி, ஏலக்காய், சாதிக்காய் மற்றும் கறுவா எண்ணெய் என்பன அதிகரித்த உற்பத்தியைப் பதிவு செய்தமையின் காரணமாக ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைக் காட்டின. இப்பயிர்கள் சாதகமான விலைகளின் மூலம் நன்மைகளைப் பெற்றன. ஏனைய களப்பயிர்களிடையே உழுந்து, பயறு, தட்டைப்பயறு, சோயா அவரை என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் மிளகாய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி குறைந்த

கற்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. கட்டடவாக்கத்திலேற்பட்ட வளர்ச்சியினால் உந்தப்பட்ட கல்லுடைத்தல் துணைத்துறையானது சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்ததுடன் சுரங்கமகழ்தல் துணைத்துறையிலான எதிர்க்கணிய அபிவிருத்திகளை ஓரளவுக்கு எதிரீடு செய்தது.

## பொருளாதாரச் செலவு

போதுமானதற்ற உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினது போட்டித் தன்மையைப் பாதிக்கின்ற காரணியாகவும் இலங்கையின் விரைவான பொருளாதார விரிவாக்கத்தினைத் தடை செய்யும் காரணியாகவும் இருக்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் முரண்பாடுகளின் காரணமான மூலவளக் கட்டுப்பாடுகள் முதன்மைத்துறைகளின் அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தியுள்ளன. அரச முதலீடுகள் 1985 இன் மொ.உ.உற்பத்தியின் 13 சதவீதத்திலிருந்து 1997 இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, அடுத்த சில ஆண்டுகளில் வளர்ச்சி வீதத்தினை 5 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரிப்பதற்கேதுவான வசதிகளை வழங்கும் விதத்தில் மொத்த முதலீட்டு விகிதம் போதுமானளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இதனைக் கொண்ட அரசாங்கம், அரசிறையில் வீழ்ச்சியும் அதிகரித்த இராணுவச் செலவுகளும் காணப்பட்டபோதும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் திட்டமிட்டவாறு மூலதனச் செலவுகளைப் பேணியது. 1998இல் அரச முதலீடு மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் 1999இற்கான வரவு

திட்டத்தினை நோக்கி மேற் கொள்ளப்பட்ட முக்கியமானதொரு நடவடிக்கையாகும். குயின் எலிசபெத் இறங்குதுறையை ஐ.அ.டொலர் 240 மில்லியன் செலவில் கட்டி தொழிற்படுத்தி மாற்றல் செய்தல் என்ற அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசிற்கும் வரையறுக்கப்பட்ட தென் ஆசிய கேட்வே டேர்மினல் பிறைவேட் நிறுவனத்திற்குமிடையில் ஆரம்ப உடன்படிக்கையொன்று கையெழுத்தானது.

**அட்டவணை 1.3**
மொத்த தேசிய உற்பத்தி
(துறைகளின் பங்குகள் சதவீதத்தில்)(அ)

| | 1997 | 1998 | 1997 | 1998 |
|---|---|---|---|---|
| 1. விவசாயம், காட்டுத்தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் | 30.4 | 26.3 | 21.7 | 21.3 |
| 2. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 2.3 | 2.7 | 2.0 | 1.8 |
| 3. தயாரிப்புத் தொழில் | 18.5 | 15.4 | 16.6 | 16.5 |
| 4. கட்டடவாக்கம் | 4.8 | 7.3 | 6.9 | 7.1 |
| 5. பணிகள் | 43.9 | 48.2 | 52.8 | 53.0 |
| மின்வலு, வாயு, நீர் | 0.5 | 1.2 | 1.3 | 1.4 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 10.8 | 10.8 | 11.1 | 11.2 |
| மொத்த சில்லறை வர்த்தகம் | 19.9 | 19.9 | 22.0 | 22.3 |
| வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 2.4 | 4.4 | 7.4 | 7.5 |
| வதிவடங்களின் உடைமை | 3.8 | 2.6 | 1.9 | 1.9 |
| பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.8 | 5.4 | 5.0 | 4.9 |
| பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 4.3 | 3.8 | 4.0 | 3.9 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 7. வெளிநாடுகளிலிருந்தான தேறிய காரணி வருவாய் | -0.6 | -2.6 | -1.2 | -1.3 |
| 8. மொத்த தேசிய உற்பத்தி | 99.4 | 97.4 | 98.8 | 98.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வீதி போன்ற பாரிய வீதி உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் மீதான ஆரம்ப வேலைகள் 1998இல் தொடங்கிவிட்டன.

கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான தேவை நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பேரார்வம் கொண்ட சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் 1998 இல் தொடங்கப்பட்டது. நலத்துறையில் நலத்துறை சீர்திருத்தங்களின் கீழ், இத்துறையில் தோன்றிவரும் தேவைகளைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு நலத்துறையின் முன்னுரிமைகள் மீள நெறிப்படுத்தப்பட்டன. சுகாதார சீர்திருத்தங்கள் மீதான ஆரம்ப வேலை 1998 இல் தொடங்கியது. நலம் மற்றும் கல்வி இரண்டிலும் அரசாங்கம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அரசின் மூலவளத் தடைகளையும் வினைத்திறன் மேம்பாடுகளையும் கருத்திற் கொண்டு இவ்விரண்டு துறைகளிலும் நேரடி தனியார்துறைப் பங்களிப்பு சிறந்த முறையில் ஊக்குவிக்கப்படுவது அவசியமானதாகும். அதேவேளை வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி மீதான சனாதிபதி செயலணிக்குழு வீடமைப்பு வசதிகளை வழங்குவதில் தனியார்துறையின் ஈடுபாட்டினை ஊக்குவிக்கும் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

## 1.3 முதலீடும் சேமிப்புக்களும்

மொத்த உள்நாட்டு முதலீடானது 1997இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது 24.3 சதவீதத்திலிருந்து 1998இல் 25.4 சதவீதத்துக்கு அதிகரித்தது. அரச முதலீட்டிலேற்பட்ட அதிகரிப்பே இவ்வதிகரிப்பிற்கான முழுக் காரணியாகக் காணப்பட்ட வேளையில்

முக்கியமாக ஏற்பட்டதாகும். பண வீக்கம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் பெயரளவு வட்டி வீதங்கள் ஏறக்குறைய 2 சதவீதப் புள்ளிகளினால் அதிகரித்தமை காரணமாக அரசபடுகடன் கருவிகளிலான முதலீட்டாளர்களுக்கான உண்மை வட்டி வீதங்கள் 1998இன் இரண்டாம் அரைப்பகுதியில் அதிக அளவில் சாதகமாக அமைந்தன. வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் 1997இன் 10 சதவீதத்திலிருந்து 1998இல் 9.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், புள்ளிக்குப் புள்ளி பணவீக்க வீதமானது 1998 ஒகத்திலிருந்து 6 சதவீதத்துக்குக் குறைவாகக் காணப்பட்டு வங்கி வைப்புக்கள் மீதான உண்மை வட்டியையும் அதிகளவு சாதகமானதாக ஆக்கியது. எல்லைச் சேமிப்பு விகிதமானது கடந்த இரண்டு ஆண்டுகளிலும் 30 சதவீதமாக விளங்கியது. அதிகரித்த மட்டத்திலான முதலீட்டினை நாடு தனது சொந்த மூலவளங்களைக் கொண்டு நிதியிடக் கூடியதாக வளர்ச்சியடைந்திருப்பதனைப பிரதிபலிக்கின்றமையினால் சேமிப்புக்களில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பானது ஊக்கமளிக்கும் அறிகுறியொன்றாகக் காணப்படுகின்றது. எனினும், சேமிப்புக்களுடன் ஒப்பிடுகையில் முதலீட்டிலேற்பட்ட வளர்ச்சியானது மெதுவாகக் காணப்பட்டமை கவனத்திலெடுக்கப்பட வேண்டிய விடயமொன்றாகக் காணப்படுகிறது.

## 1.4 விலைகள்

கிடைக்கத்தக்க அனைத்து விலைச் சுட்டெண்களும் 1998இல் பணவீக்க வீழ்ச்சியொன்றைப் பிரதிபலித்தன. நுகர்வோர் விலைகள் 1997இன் 7 - 9.6 சதவீதத்துடனொப்பிடுகையில் 6 -9.4 சதவீதத்தால்

**வரைபம் 1.3**
**முதலீடும் சேமிப்புக்களும்**

**வரைபடம் 1.3.1**
**முதலீடும் முதலீட்டாளர்களும்**




**வரைபடம் 1.3.2**
**சேமிப்பும் சேமிப்போரும்**



## வரைபம் 1.4
## விலைகளில் மாற்றங்கள்

**வரைபடம் 1.4.1**
**பண வீக்கம் (வருடாந்தம்)**




**வரைபடம் 1.4.2**
**நுகர்வோர் விலைகள் (கொ.நு.வி.சு.)**




அதிகரிப்பு வீதம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 2-4 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரண்டு பருவங்களிலுமான சிறப்பான நெல் அறுவடையும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு அதிகரித்த அளவில் கிடைத்தமையையும் உள்ளடக்கிய திருந்திய உள்நாட்டு வழங்கல்களே காரணமாகும். 1997 செத்தெம்பரில் மின்வலுத் தீர்வைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் மறைமுகமான தாக்கம் 1998இல் உணரப்பட்டது. துணிவகை, காலணி, தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நலப்பணிகள் ஆகியவற்றின் விலையதிகரிப்புக்கள்,

தனியார் துறையில் பெருமளவு எண்ணிக்கையான கூலிச் சபைகளுக்குப் பொருந்தக் கூடிய ஆகக் குறைந்த கூலிகள் மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டதுடன் இதன் விளைவாக தொழிலாளர்களில் பெரும்பாலான வகையினரின் கூலிகளில் கணிசமான அதிகரிப்புப் பதிவு செய்யப்பட்டது. 1998 சனவரியிலிருந்து கூட்டு உடன்படிக்கைகளினால் உள்ளடக்கப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தக் கூலிவீதமானது, கொடுக்கப்பட்ட மட்டத்தை விலை விஞ்சுமிடத்து வழங்கப்படும் நாளொன்றுக்கு ரூ.6 கொண்ட பங்கு விலை சிறப்புக் கொடுப்பனவையும் சேர்த்து ரூ.83 இலிருந்து ரூ.95 க்கு அதிகரித்தது. இச்

குறைநிரப்பு விலைக் கூலியொன்று வழங்கப்பட்டது. ஏனைய 19 கூலிச் சபைகளில் உள்ளடக்கப்பட்ட ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலி வீதங்களும் உயர்த்தப்பட்டன. இதன்படி, கூலிச்சபைகளினால் உள்ளடக்கப்பட்ட தொழிலாளர்களுக்கான பொதுவான ஆகக் குறைந்த கூலிவீதச் சுட்டெண் 12 சதவீதத்தால் அதிகரித்தது.

சிறிய அளவு கட்டடவாக்க நடவடிக்கைகளிலுள்ள தச்சர்கள் மற்றும் கொத்தனார்கள் சிறிய அளவு வேளாண்மைகளிலுள்ள (தேயிலை, தெங்கு, நெல்) வேலையாட்கள் என்போரை உள்ளடக்கிய பெருமளவு முறைசாரா துறை ஊழியர்கள் 7 - 15 சதவீதத்திற்கிடைபட்ட கூலி அதிகரிப்புக்களைப் பெற்ற வேளையில் இறப்பர் துறையில் இதே நடவடிக்கைகளிலிருந்த வேலையாட்களின் பெயரளவு கூலிகள் வீழ்ச்சிக்குட்பட்டு இறப்பரின் மோசமடைந்த விலைகளைப் பிரதிபலித்தன.

## 1.6 தொழில் நிலை மற்றும் தொழிலின்மை

தொழிலின்மை வீதம் 1998இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தின் காலாண்டுத் தொழிற்படை அளவீடுகளின்படி, 1990இன் தொடக்கத்தில் தொழிற்படையின் 16 சதவீதத்திலிருந்து 1998இன் மூன்றாம் காலாண்டில் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் கூலி செலுத்தப்படாத குடும்ப வேலையாட்களையும் தொழிலிலுள்ளவர்களாக உள்ளடக்கும் விதத்தில் உள்ளடக்கப் பரப்பு விரிவாக்கப்பட்டுள்ளமையின் காரணமாக தொழிலின்மை மீதான கடந்த காலத் தரவுகளையும் அண்மைய தரவுகளையும் கட்டாயமாக ஒப்பிடமுடியாது. கூலி

இனைவிட விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ள கட்டடவாக்கத்துறையும் ஏறத்தாழ 5,400 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. 2.4 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேளாண்மைத் துறையின் தொழில்நிலை மொத்தத் தொழிற்படையில் 36 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. 15 சதவீதத்திற்கும் சிறிது கூடுதலான வேலையாட்கள் தயாரிப்புத்துறையில் காணப்பட்ட வேளையில் எஞ்சிய 47 சதவீதத்தினரும் பணிகள் துறையில் காணப்பட்டனர். அரசதுறைத் தொழில் நிலையின் பங்கு 1993 இன் 25 சதவீதத்திலிருந்து 1998இல் 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1998இல் அரசதுறைத் தொழில் நிலையில் அமைய வேலையாட்கள் 9 சதவீதத்திற்கு வகைகூறினர்.

## 1.7 இறைக் கொள்கையும் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளும்.

கடந்த இரு ஆண்டுகளிலும் இறைப்பற்றாக் குறைகளில் வெற்றிகரமாக அடையப்பட்ட குறைப்பினை 1998இல் பேண முடியவில்லை. திரண்ட இறைப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதத்திற்குக் குறைக்கின்ற வேளையில் நடைமுறைக் கணக்கில் மிகையை உருவாக்குவதனையே 1998ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் இலக்காகக் கொண்டிருந்தது. எனினும், வரி அரசிறையில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியும் குறிப்பாக பாதுகாப்புத் துறையில் ஏற்பட்ட மிகப் பெருமளவிலான செலவும் பெருமளவு நடைமுறைக் கணக்கு மற்றும் திரண்ட இறைப் பற்றாக்குறைகளுக்கு வழிவகுத்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 1997இன் 2.2 சதவீதத்திலிருந்து 1998இல் மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதத்திற்கு

தனியார்முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்ட பல்வேறு வரிவிலக்கல்களும் சலுகைகளுமே பெருமளவிற்குக் காரணங்களாகும். மேலும், பொருட்கள் பணிகள் வரி மாற்றம் இடம்பெறலின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அரசிறையை உருவாக்கவில்லை. மேலும், 12.5 சதவீதமானது மதிப்பிடப்பட்ட அரசிறை நடுநிலை வீதமாக (மறுதலையாக இது மொத்தப் புரள்வு வரியை அகற்றியது) ஏறத்தாழ 17 சதவீதத்திலும் பார்க்க குறைவாகவே இருந்தது. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வரிச் சேகரிப்புக்கள் 1997இன் 16 சதவீதத்திலிருந்து 1998இல் 14.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. விலக்கல்கள், சலுகைகள் மற்றும் இறக்குமதிப் பெறுமதிகளில் குறைப்பு என்பனவற்றின் முக்கிய விளைவாக இறக்குமதி வரி அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலங்கையின் முக்கிய இறக்குமதிகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பிரதிபலித்தது. வரி அரசிறையின் மெதுவான வளர்ச்சியினால் ஏற்பட்ட தாக்கமானது அரச தொழில் முயற்சிகளிலிருந்தான மேலதிக இலாப மாற்றல்களின் வடிவிலான வரியல்லா அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, பெருந்தோட்டக் கம்பனிகளிலிருந்தான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டி, தீர்வைகள் மற்றும் பங்கிலாபங்கள் போன்ற ஏனைய வரியல்லா அரசிறைகள் உரிய நேரத்தில் சேகரிக்கப்பட்டமை என்பனவற்றினால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. மொத்த அரசிறை 1997 இன் 18.4 சதவீதத்திலிருந்து 1998இல் மொ.உ. உற்பத்தியின் 17.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பில் 44 சதவீதத்திற்கு வகைகூறியது.

நடைமுறைச் செலவானது வட்டிச் செலவுகளிலும் குடும்ப அலகுகளுக்கான உதவு தொகைக் கொடுப்பனவுகளிலும் செய்யப்பட்ட குறைப்புக்களின் மூலமாக 1997இன் 20.8 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 19.7 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. தனியார் மயமாக்கல் பெறுகைகளைப் பயன்படுத்தி 1997இல் பொதுப் படுகடனின் ஒரு பகுதி தீர்ப்பனவு செய்யப்பட்டமை உட்பட கடந்த இரு ஆண்டுகளாக மேம்பட்ட இறைச் செயலாற்றத்தின் சாதகமான தாக்கங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வட்டிக் கொடுப்பனவுகள் 6.2

**அட்டவணை 1.4**

அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)

| விடயம் | 1980 | 1985 | 1990 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை | 19.6 | 22.3 | 21.1 | 19.0 | 20.4 | 19.0 | 18.5 | 17.3 |
| 2. செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலும் | 41.8 | 34.1 | 31.0 | 29.5 | 30.5 | 28.5 | 26.4 | 26.4 |
| 2.1 நடைமுறைச் செலவினம் | 18.5 | 20.1 | 22.3 | 21.9 | 23.1 | 22.8 | 20.7 | 19.7 |
| 2.2.1 பாதுகாப்பு | 1.3 | 4.5 | 4.1 | 4.6 | 6.5 | 5.8 | 5.1 | 5.0 |
| 2.2.2 வட்டி | 3.4 | 4.6 | 6.4 | 6.6 | 5.7 | 6.4 | 6.2 | 5.4 |

சதவீதத்திலிருந்து 1998இல் 5.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக குடும்ப அலகுகளுக்கான மாற்றல்கள் 1997இன் 4.1 சதவீதத்திலிருந்து 1998இல் 3.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் கூலிப்பட்டியல் 1997 இன் மொ.உ.உற்பத்தியின் 5 சதவீதத்திலிருந்து 1998இல் மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது அதிகரித்த தொழில் நிலை அதே போல் இவ்வாண்டில் வழங்கப்பட்ட கூலி அதிகரிப்புக்கள் என்பனவற்றின் விளைவாகும். இராணுவ கருவிகளின் கொள்வனவுகளின் பேரிலான மீள் கொடுப்பனவுகள் உட்பட மொத்த பாதுகாப்புச் செலவினங்கள் 1997 இன் ரூ.47,718 மில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 5.4 சதவீதம்) 1998இல் ரூ.56,390 மில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 5.6 சதவீதம்) கொண்ட உச்ச மட்டத்திற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1998இல் அரச முதலீடு (மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதம்) பெரும்பாலும் வரவு செலவுத்திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 6.9 சதவீதத்தினை அடைந்தது. 1995 இன் மொ.உ.உற்பத்தியின் 7.7 சதவீதத்திலிருந்து 1997 இல் 5.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாக இருந்தது. வெளிநாட்டு உதவியின் அதிகரித்த பயன்பாட்டின் காரணமாக 1998இல் அரச முதலீடுகளின் அதிகரிப்பு சாத்தியமாயிற்று. முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களைப் பேணுவதற்கான கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டிருந்தமையினால் கடந்தகாலங்களைப் போலன்றி, ரூபாவினால் தேவைப்படுத்தப்பட்ட பொருந்தும் வகையிலான மூலவளங்கள் மிக விரைவாக

மொ.உ.உற்பத்தியின் மற்றைய 7 சதவீதத்தினையும் மேலதிக உள்நாட்டுக் கடன்பாடுகள் மூலம் நிதியிட வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் அதிகரித்த உள்நாட்டு மூலவளத் தேவைகள் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்து குறுங்கால கடனாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் பயன்படுத்தப்பட்டமை உள்ளிட்ட வங்கிக் கடன்பாடுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. பொதுவாக வங்கிக் கடன்பாடுகளில் ஏற்பட்ட அத்தகைய பாரிய அதிகரிப்பு வட்டி வீதங்களின் மீது பலமான அழுத்தங்களை தோற்றுவிக்கக்கூடும். எனினும், தனியார்துறைக்கான கொடுகடன் வளர்ச்சி மெதுவடைந்துள்ளமையினால் வங்கித்தொழில் முறைக்கான மேலதிக மூலவளங்கள் தக்கவைக்கப்பட்டமையின் மூலம் மிதமான நாணய விரிவாக்கத்துடன் வட்டி வீதங்களில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படுவதனைத் தவிர்க்க முடிந்தது. இறைப் பற்றாக்குறைக்கான மத்திய வங்கியின் நிதியிடல் 1997 இன் ரூ.13,991 மில்லியன் கொண்ட மீள் கொடுப்பனவொன்றுடன் ஒப்பிடுகையில் ரூ.5,609 மில்லியனால் அதிகரித்தது.

திரண்ட பற்றாக்குறை நியதிகளில் 1998இன் இறைச் செயலாற்றம் பின்னடைந்து காணப்பட்ட போதும், வரி அமைப்பு, அரச முயற்சிகளின் சீர்திருத்தங்கள் மற்றும் படுகடன் முகாமைத்துவம் என்பனவற்றுடன் தொடர்பான அமைப்பியல் சீர் திருத்தங்களில் மேலும் முன்னேற்றங்கள் அடையப்பட்டன.

வரி அமைப்பினை மேலும் இலகுபடுத்தல், வரித்தளத்தினை மேம்படுத்தல் மற்றும் வரி அமைப்பின் டுலப்பாட்டுத் தன்மையினை அதிகரித்தல் என்பனவற்றை

பதனிடலுக்கான இறக்குமதிகள் பொருட்கள் பணிகள் முறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. நிதியியல் பணிகள் தொடர்ந்தும் மொத்தப் புரள்வு வரியின் கீழ் இருந்த தெனினும் முன்னைய 2 சதவீதத்துடன் ஒப்பிடுகைளில் குறைந்த வீதமான 1 சதவீதத்தில் காணப்பட்டது. பொருட்கள், பணிகள் வரியை அறிமுகப்படுத்தும் பொழுது பெரும்பாலான நாடுகள் அரசிறை நடு நிலைக்கு மாறுவதற்கு அல்லது அரசிறையை உயர்த்துவதற்கான அமைப்பினை மீள வடிவமைத்திருக் கின்றன. எனினும் 12.5 சதவீதம் கொண்ட அரசிறை நடுநிலை வீதத்திற்கும் குறைவாக பொருட்கள் பணிகள் வரியை அறிமுகப்படுத்திய ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அரசிறை நடுநிலை வீதம் ஏறத்தாழ 17 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. 1999 ஏப்பிறலில் முழுமையாக ஒராண்டு முடிவடைந்து விடுமெனினும் 1998இல் காணப்பட்ட அறிகுறிகளின்படி பொருட்கள் பணிகள் வரி போதுமான அரசிறைகளை உருவாக்கியிருக்கவில்லை. மாற்றத்திற்குட்படுகின்ற காலத்தில் தொடக்க நிலையில் காணப்படும் பிரச்சனைகளும் பொருட்கள் பணிகள் வரியின் குறைந்த வீதமுமே இதற்குக் காரணமாகும். வரிமுறையின் அரசிறை ஆற்றல் குறைவடைந்தமைக்கு இதுவே முக்கிய காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் விகிதமாக வரி அரசிறை 1997 இன் 16 சதவீதத்திலிருந்து 14.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

தற்போதுள்ள 10, 20 மற்றும் 35 சதவீதங்களைக் கொண்ட 3 வீத பிரிவு அமைப்பு முறைக்குப் பதிலாக 5- 10 மற்றும், 30 சதவீத அமைப்புமுறை கொண்டு வரப்பட்டதன் மூலம் தீர்வை வீதங்கள் மேலும்

**வரைபடம் 1.6**
**இறை பொது நோக்கு**

**வரைபடம் 1.6.1**
**அரசு வரவு செலவுத் திட்டம்**




**வரைபடம் 1.6.2**
**அரச வரவு செலவுத் திட்டம்**



விதந்துரைப்புக்களைத் தொடர்ந்து 2 முறைகளைக் கொண்டதொரு தீர்வை அமைப்பு 2000 ஆம் ஆண்டில் பின்பற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1998இல் இறைத் தொழிற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கொள்கை மாற்றங்களாக புடவை இறக்குமதிகளின் தாராளமயமாக்கலும் அதனைத்தொடர்ந்து புடவைத்துறையின் படுகடன் பொறுப்புக்கள் அரசினால் கையேற்கப்பட்டமை மற்றும் பாதிக்கப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்ட புடவை படுகடன் மீட்பு நிதியம் ஆடைகள் மீதான தீர்வை 10 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டமை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பாதிக்கப்படக் கூடிய தொகுதிகள், தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமைத் துறைகள் மற்றும் பிராந்திய கைத்தொழில் மயமாக்கல் என்பனவற்றிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு உதவித் திட்டங்கள் என்பன விளங்கின.

1997ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் கூட்டு இலாபவரி மற்றும் ஆகக் கூடிய தனியாள் வருமானவரி ஆகிய இரண்டும் 35 சதவீதத்திலிருந்து 1998இல் 30 சதவீதத்திற்கும் அதன் பின்னர் 1999இல் 25 சதவீதத்திற்கும் குறைக்கப்படுமென அறிவித்தது. எனினும், அரசிறை தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு முன்மொழிவுகள் 1998இல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமைத் துறைகளுக்கு வருமான வரிச்சலுகைகள் வழங்கப்பட்டன. இதன்படி, வேளாண்மை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, சுற்றுலா என்பனவற்றிலுள்ள தொழில் முயற்சிகளுக்கான கூட்டுவரிவீதம் 15 சதவீதத்திற்குக்

பெரும்பாலான தேவைகள் திறைசேரி முறிகள் மூலமாக ஈடுசெய்யப்பட்டன. 1997இல் ரூ.10,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் வழங்கப்பட்ட வேளையில் 1998இல் இது ரூ.38,915 மில்லியனுக்கு அதிகரித்தன. இதன் விளைவாக மொத்தத் தேறிய உள்நாட்டுக் கடன்பாட்டில் திறைசேரி முறிகளின் பங்கு 1997இன் 22 சதவீதத்திலிருந்து 1998இல் 72 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்தப்படுகடன் இருப்பு 1997இல் மொ.உ.உற்பத்தியின் 86 சதவீதத்திலிருந்து 1998இல் 89.4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் குறுங்காலப்படுகடன் 1997இன் 40 சதவீதத்திலிருந்து 1998இல் 37 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப்படுகடனின் பங்கு 1998இல் மொ.உ. உற்பத்தியின் 45.4 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் 8.4 சதவீதமான அதிகரிப்பு செலாவணிவீத தேய்வின் பேரில் ஏற்பட்டதாகும். அரசின் மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1997இன் 10.4 சதவீதத்திலிருந்து 1998இல் மொ.உ.உற்பத்தியின் 11.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. வட்டிக் கொடுப்பனவுகள் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 48 சதவீதத்திற்கு வகை கூறின.

திறைசேரி முறிகளின் சந்தை சார்ந்த தன்மைகளை மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரி முறி ஏலங்களில் ஊழியர் சேமநிதி நேரடியாகப் பங்கு கொள்ளுவது 1998இல் இடைநிறுத்தப்பட்டது. இது போட்டியற்ற விலைக் கோரல்களை அதாவது சந்தைக் கோட்பாடுகளுக்கு முரணான வீதமற்ற விலைக் கோரல்களைச் சமர்ப்பிப்பதை இல்லாமல் செய்தது.

உயர்ந்த வட்டிவீதத்தில் பெறப்பட்ட ரூ.16,000 மில்லியன் ரூபாக் கடன்கள் முதிர்ச்சிக்கு முன்னான விருப்பத் தேர்வைப் பயன்படுத்தி தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## 1.8 பன்னாட்டுச் சூழலும் வெளி நாட்டுத்துறையும்

பெருமளவில் குழப்பம் நிறைந்த நிகழ்வுகளால் 1998இல் பன்னாட்டுப் பொருளாதார சூழல் தொந்தரவுக்குள்ளானது. 1998இல் குறிப்பாக தெற்காசிய உலகப் பொருளாதாரத்தினால் பெருமளவில் உணரப்பட்டது. யப்பானில் தொடர்ந்த வாணிக விலையிறக்கப் போக்கு, ஒகத்திலிருந்து ருசியாவில் ஏற்பட்ட ருபிள் நெருக்கடி தென் அமெரிக்காவில் காணப்பட்ட ஓரளவு கடினமான பிரச்சனைகள் என்பன அழுன்றெழும் நிச்சயமற்ற உலகப் பொருளாதார மற்றும் நிதியியல் சூழலுக்கு எரியூட்டின. இப் பின்னணிக் கெதிராக மிகவும் மந்தமடைந்த கேள்வி, வீழ்ச்சியடைந்து செல்லும் பண்ட விலைகளுடனான செலாவணித்தளர்வு அழுத்தங்கள் புதிதாகத் தோற்றம்பெறும் சந்தைப் பொருளாதாரங்கள் பலவற்றிலிருந்து மூலதனப் பெயர்ச்சி என்பவற்றால் தொடர்ந்து உலகப் பொருளாதாரம் பாதிப்புற்றது.

உலகப் பொருளாதாரம், 1997 இன் 4.3 சதவீத வளர்ச்சியிலிருந்து மிகக் குறைந்த அளவிலான 2.5 சதவீதத்தால் மட்டுமே வளர்ச்சியடைந்தது. ஆசியாவிலுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சிவீதம் 1997இன் 6.6 சதவீதத்திலிருந்து 3.8 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், முன்னேற்ற மடைந்த பொருளாதார வளர்ச்சி 1997இன் 3.2 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1998இல் யப்பானின் வெளியீடு 2.8 சதவீதத்தால் சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் மாற்றமடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரம் 0.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ருசியாவின் வெளியீட்டில் 4.6 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

விலை உறுதிப்பாட்டிற்கான அரசாங்கங்களில் உறுதியான கடப்பாடுகளுடன் இணைந்து மந்தமடைந்த உலக கேள்வியால் எழுந்த வீழ்ச்சியுறும் விலைகள் ஆசியா மற்றும் மாற்றமடைந்துவரும் நாடுகள் தவிர்ந்த பெரும்பாலான பிராந்தியங்களில் பணவீக்கம் தொடர்ந்து வீழ்ச்சியடைவதை உறுதிப்படுத்தின. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் நுகர்வோர் விலை பணவீக்கம் 1997இன் 2.1 சதவீதத்திலிருந்து 1998இல் 1.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இது 9.3 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதே வேளை, மாற்றமடைந்துவரும் நாடுகளின் பணவீக்கம் 28.2 சதவீதத்திலிருந்து 30.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. பணவீக்க வீதத்தின் வீழ்ச்சிக்கு இணையாக உலக வட்டி வீதங்களும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. உலக வர்த்தகத்தின் மெதுவடையும் தன்மை 1997 இன் உயர்மட்டமான 10 சதவீதத்திலிருந்து 1998இல் 3.4 சதவீத வீதத்தை பதிவு செய்தது. வர்த்தகத்தின் மெதுவடையும் தன்மை அனைத்துப் பிராந்தியங்களிலும் காணப்பட்டது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதிகள் 1997இன் 11.4 சதவீதத்திலிருந்து 1998இல் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. முன்னேற்றமடைந்த நாடுகளின் ஏற்றுமதிகள் 1997 இன் 10.4 சதவீதத்திலிருந்து 3.6 சதவீதத்திற்கு மெதுவடைந்தன. 1998இல் ஆசிய நாடுகளுக்கான இறக்குமதிகள் 4.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அபிவிருத்தியடைந்து

**சிறப்புக்குறிப்பு 1**

# யூரோ

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள[1] 15 உறுப்பு நாடுகளில் 11 நாடுகள் ஒன்றிணைந்ததன் மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட "யூரோ நிலம் " என்ற தனியான பொருளாதார வலயத்தின் நாணயமே யூரோ ஆகும். 1957இல் ரோம் உடன்படிக்கையின் யோசனை தெரிவிக்கப்பட்ட ஐரோப்பாவின் பொருளாதார ஒன்றிணைப்பிற்கான முயற்சியே ஐரோப்பாவிற்கு தனியொரு நாணயம் என்ற கோட்பாட்டின் ஆரம்பமாக இருந்து ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினை நிறுவியது. எனினும் 1969இல் இடம் பெற்ற ஐரோப்பியத் தலைவர்களின் கேய்க் உச்சி மாநாட்டின் போதே இந்த யோசனை முழு அளவில் உறுதியாக்கப்பட்டது. இதுதொடர்பான தடைகள் இறுதியில் அகற்றப்பட்டு 1992 இல் இடம் பெற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மாஸ்டிரிச் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு உறுப்பு நாடுகளினால் உறுதி செய்யப்பட்டது.

ஐரோப்பிய நாணய ஒன்றியத்தினதும் யூரோவினதும் முறையான அறிமுகம் மூன்று கட்டங்களில் இடம் பெற்றிருக்கிறது. நிலை 1 1990 யூலை 1ஆம் நாள் ஆரம்பமாகியதுடன் இந் நிலையில் மூலதனக் கட்டுப்பாடுகளை அகற்றுவதிலும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளே உள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. 1994 சனவரி 1ஆம் நாள் தொடங்கிய கட்டம் 11 உறுப்பினர் நாடுகளிடையே இறை மற்றும்

இயலாத நிலையான செலாவணி வீதங்களும் நிர்ணயிக்கப்பட்டன. யூரோ தாள்களும் குத்திகளும் தேசிய நாணயங்களோடு 2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருக்கும். பங்கேற்கும் நாடுகளின் தேசிய நாணயங்கள் மாற்றத்திற்குட்படுகின்ற ஆறு மாத காலத்திற்குப் பின்னர் 2002ஆம்ஆண்டு யூலை மாதம் 1ஆம் நாளிலிருந்து முற்றாக அகற்றப்படும். அதன் பின்னர் இந்த 11 நாடுகளின் தேசிய நாணயங்களும் சட்டபூர்வ வழங்கல் கொண்ட நாணயங்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

யூரோவின் அறிமுகமானது பிறெட்டன் வூட் நிறுவனங்களுக்குப் பிறகு உலகளாவிய நிதியியற் பரப்பின் நிறுவன ரீதியான அபிவிருத்தியில் மிக முக்கியமானதொரு நிகழ்வாகக் கருதப்படுவதுடன் உலகளாவிய பொருளாதாரத்தின் மீது பரந்தளவு உட்படுத்தல்களை விளைவிக்கக்கூடும். யூரோ உறுதியானதாக மாறி, பன்னாட்டு ரீதியாக தங்கியிருக்கக் கூடிய நாணயமாக தொடருமாயின் உலகில் மிகப் பாரிய உள்நாட்டு நிதியியல் சந்தையை உருவாக்கக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்குமேயானால் நாணய ஒன்றியம் உலகளாவிய பொருளாதார உறவுகளையும் உள்ளார்ந்த வலுச் சமநிலையையும் பாதிப்பதுமட்டுமன்றி நீண்டகாலத்தில் அவற்றின் தோற்றத்தையும் மாற்றக்கூடும்.

யூரோவின் உள்ளார்ந்த நன்மைகள் பல்வேறுபட்ட பரிமாணங்களிலிருந்து கிடைக்கிறது. யூரோ

பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் அரசபடுகடன் என்பன யப்பானைவிட பெருமளவு கூடுதலாக வுள்ளன. இதே போன்ற தன்மையை பன்னாட்டுப் படுகடனிலும் அதே போன்று வெளிநாட்டுச் செலாவணி சந்தைகளிலும் காணமுடியும்.

யூரோ சந்தைகளின் இவ்வுள்ளார்ந்த பருமன் குறைந்த நிதியிடல் செலவுகளுடன் புதிய யூரோவில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் கருவிகளின் அபிவிருத்திக்கு வழிவகுக்கக்கூடும். மேலும், யூரோ நாணயமானது புலப்பாட்டுத்தன்மையினையும் செயல் திறனையும் அதிகரிப்பதன் மூலம் குறுகிய

**மூலதனச் சந்தைக் கருவிகள்**
**(1997.3.31இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் பில்லியன்)**

| | உள்நாட்டு நாணயமுறிகள் | பட்டியலிடப்பட்ட முறிகள் | அரச படுகடன் |
|---|---|---|---|
| ஐ.அ.நாடுகள் | 4,677 | 6,939 | 7,231 |
| ஐ.ஒன்றியம்* | 2,776 | 4,359 | 4,689 |
| யப்பான் | 1,368 | 3,106 | 3,203 |

* அனைத்து 15 நாடுகளையும் உள்ளடக்குகிறது

வட்டி வீச்சுக்கான ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் யூரோப் பிராந்தியத்தின் நிறுவனங்களுக் கிடையிலான நீண்டகால உண்மை மற்றும் நிதியியல் ஒப்பந்தங்களின் வெளிநாட்டுச் செலாவணி இடர் நேர்வுகளை இல்லாதொழிக்கும். யூரோ பிராந்தியத்திற்குள்ளே அதிகரித்துவருகின்ற போட்டி அழுத்தங்கள் இதுவரை இருந்துவந்த புவியியல் ரீதியான அனுகூலங்களை நீக்கி அதிகரித்த சந்தை ஒருங்கிணைப்புகளுக்கு வழியமைத்துக் கொடுக்கும். யூரோ பிராந்தியத்திற்குள்ளே பேரண்டப் பொருளாதார

எதிரெதிராக பன்னாட்டு வர்த்தகத்தையும் தூண்டும்.

தனியொரு நாணயம் என்ற கோட்பாடும் தேவைப்படுத்தப்பட்ட அமைப்பியல் மாற்றங்களும் ஐரோப்பிய நாணய ஒன்றியத்தின் வெற்றிக்கும் உறுதிப்பாட்டிற்குமான கடுமையான அறைகூவல்களை முழுமையாக ஒழித்துவிடாது. அமைப்பின்படி முறையான வளர்ச்சி உறுப்பினர் நாடுகளின் அரசியல் மற்றும் சமூக ஒத்திசைவிலேயே பெருமளவி ற்குத் தங்கியிருக்கிறது. நாணய செலாவணிவீத கொள்கைகளின் இறைமையை ஐரோப்பிய மத்திய வங்கிக்கு ஒப்படைப்பதன் மூலம் தனியொரு நாணய முறையைப் பின்பற்றுவதிலிருந்தும் ஐக்கிய இராச்சி யத்தினை தன்னிச்சையாக விலக நிர்ப்பந்தித்தது போல தோன்றுகின்றது. உறுப்பினர் நாடுகளுக்கு பொருளாதாரத்தின் மீது செல்வாக்கு செலுத்துவத ற்குக் கிடைக்கத்தக்கதாக வுள்ள ஒரே கருவி இறைக் கொள்கையாவதோடு மாறாக, இது ஒரு முகப்படுத் தப்பட்ட பிரமாணத்தினால் நிருவகிக்கப்படுகின்றது. எனினும் யூரோ பரப்பு மட்டத்தில் பொருத்தமான கலப்புக் கொள்கையொன்றை எய்துவது அறைகூவல் மிக்கதொரு பணியாக இருக்கும். ஏனெனில் தேசிய மட்டத்தில் காணப்படும் அமைப்பியல் பிரச்சனை களைக் கையாள்வதற்கு தேவையான கொள்கைகள் தனி நாணய கொள்கை மற்றும் யூரோ நாணய செலாவணிஎன்பனவற்றின் நடத்தைமீது சிக்கல் களைக் கொண்டிருக்கும். யூரோப் பிராந்தியத்தின் பெரும்பாலான உறுப்பு நாடுகள் குறிப்பிடத்தக்களவு ஒழுங்கு விதிகளுடன் கூடிய அமைப்பியல் பிரச்சனைகளினால் சூழப்பட்டுள்ளன. தொழிலாளர்

நாடுகளின் நலிவடைந்த பொருளாதார நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவு ஆகிய இரண்டாலும் சீனி விலைகள் தொடர்ச்சியான நான்காவது ஆண்டிலும் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. இதே வேளை, கோதுமை விலைகளும் முக்கியமாக ஆசியாவில் ஏற்பட்ட பொருளாதார மெதுவடைவு காரணமாக ஏற்பட்ட குறைவான கேள்வியின் விளைவால் 1998இல் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. மறுபக்கத்தில் 25வருட குறைந்த மட்டத்திற்கு அரிசி இருப்புக்கள் வீழ்ச்சியடைந்ததால் இவ்வாண்டில் அரிசி விலைகள் பெருமளவில் அதிகரித்தன. உலக அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உலக அரிசி உற்பத்தியில் அரைவாசிக்கும் மேலாகவும் உலக அரிசி ஏற்றுமதிகளின் காற்பகுதிக்கும் வகை கூறும் சீனா மற்றும் இந்தியாவின் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டதாகும். பன்னாட்டு இறப்பர் விலைகள் இவ்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய குறைந்த மட்டங்களைவிட ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டின் மட்டத்தைவிட குறைவாகக் காணப்பட்டன. தெங்கு உற்பத்திகளின் பன்னாட்டு விலைகள் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் கடுமையாகவும், அதனைத் தொடர்ந்து மிதமாகவும் அதிகரித்தன. தெங்கு உற்பத்திப் பொருட்களின் விலையிலான இந்த அதிகரிக்கும் போக்கு பெருமளவில் இயல்பற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக குறிப்பாக பிலிப்பைன்சு மற்றும் இந்தோனேசியாவை உள்ளடக்கி உலக தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகும். 1997இல் செழிப்பான நிலையில் இருந்த தேயிலை விலைகள் 1998இல் அதிகரித்த

கொரிய வொன் நாணயத்தை 42 சதவீதத்தினாலும் தாய்லாந்து பாட் நாணயத்தை 29 சதவீதத்தாலும் பிலிப்பைன்சு பெசோ நாணயத்தை 3 சதவீதத்தாலும் மலேசியன் றின்கிட் நாணயத்தை 2 சதவீதத்தாலும் உயர்வடைய வழிவகுத்தது. எனினும் நிச்சயமற்ற பொருளாதார மற்றும் அரசியல் பின்னணியொன்றில் இந்தோனேசியாவின் ருபய்யா நாணயம் தொடர்ந்தும் பெறுமானத் தேய்வடைந்து ஐ.அ.டொலருக்கெதிராக 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நிதியியல்துறை சீர்திருத்தங்களை கருத்திற் கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இசையும் வகையில் யப்பானிய யென், ஐ.அ.டொலருக்கெதிராக 12 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதே வேளையில் பெருமளவு காத்திருந்த யூரோ நாணயத்தின் அறிமுகம் 1999 சனவரி 1 இல் இடம் பெறும் என்ற எதிர்பார்ப்பில் பெரும்பாலான ஐரோப்பிய நாணயங்கள் ஐ.அ. டொலருக்கெதிராக உயர்வடைந்தன. ருசியாவிலான நிதியியல் துறைப் பிரச்சனைகள் 1998இல் ஐ.அ. டொலருக்கெதிராக 71 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த ரூபிலின் சரிவுக்கு இட்டுச் சென்றது. தென் ஆபிரிக்க ராண்ட் நாணயமும் பிறேசிலின் றியல் நாணயமும் முறையே 17 சதவீதத்தாலும், 8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து பன்னாட்டு நாணயச் சந்தைகளில் இன்னமும் தொடர்ச்சியான நிச்சயமற்ற மனப்பாங்குகளை எடுத்துக் காட்டின.

உலக ரீதியாக வீழ்ச்சியடையும் பணவீக்க வீதங்களுக்கு இசைவாக குறுகியகால வட்டி வீதங்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. ஆறு மாதங்களுக்கான இலண்டன் வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கும்

பாதிக்கப்பட்டிருக்கையில் பின்னையது முழு அளவில் பாதிப்புக்குள்ளானது. உதாரணமாக இந்தியா, பிலிப்பைன்சு, மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களுக்கான வட்டி வீதங்களின் வீச்சு 300 அடிப்படைப் புள்ளிகளுக்கும் மேலாக அதிகரித்ததோடு கொரியா மற்றும் கொங்கொங்குக்கான வழங்கல்கள் 500 அடிப்படைப் புள்ளிகளுக்கும் மேலால் அதிகரித்தது. இந்தோனேசியா மற்றும் மலேசிய வழங்கல்களுக்கான வீச்சு 1000த்திற்கும் மேலான அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்தது. இதன் விளைவால், உலகம் பூராவும் தேறிய தனியார் மூலதனப் பாய்ச்சல்கள் 1997இன் ஐ.அ.டொலர் 124 பில்லியனிலிருந்து 1998இல் ஐ.அ.டொலர் 57 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. 1997இன் ஐ.அ.டொலர் 29 பில்லியன் தேறிய உட்பாய்ச்சலுக்கு எதிராக 1998இல் ஐ.ஆ.டொலர் 44 பில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஆசியா பெருமளவில் பாதிக்கப்பட்டது.

தென்கிழக்காசிய நாணய நெருக்கடிகளுக்குப் பின்பும் அதனைத் தொடர்ந்து குறிப்பாக ருசியா மற்றும் தென் அமெரிக்கா உட்பட்ட ஏனைய பிரதேசங்களிலான பாதகமான நிகழ்வுகளினாலும் பிறெற்றன் வூட்ஸ் நிறுவனகளினால் சார்பு ரீதியில் குறுகிய காலப்பகுதியில் அவற்றினது உலகளாவிய தாக்கங்களைக் கட்டுப்படுத்தத் தவறியமையாலும் 1998இல் விவாதத்திற்குரிய பெரும் விடயங்களாக நெருக்கடித் தீர்வும் தவிர்ப்பும் புதிய பன்னாட்டு நிதியியற் கட்டமைப்பொன்றிற்கான தேவை என்பன விளங்கின. தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியியல் மூலவளங்களை வழங்குவதன் மூலம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட பொருளாதாரங்களை குறைப்பதைனயும் தொடர் மற்றும் வழிந்தோடும் தாக்கங்களை மட்டுப்படுத்துவதையும் நெருக்கடித்தீர்வு முயற்சிகளின் செயல் திறனை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பயன்மிக்க நிதியியல் சந்தை மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பை வலுப் படுத்தல் நிறுவன ரீதியான உட்கட்டமைப்பை மேம் படுத்தல் புலப்பாட்டுத்தன்மையை அதிகரித்தல் சந்தை ஒழுங்கு முறை மற்றும் கம்பனிகளின் மேற்பார்வை, நிதியியல் நிறுவனங்களில் இடர்நேர்வு முகாமைத்து வத்தை மேம்படுத்தல் என்பனவற்றை இறுதி நோக்காகக் கொண்ட பன்னாட்டுத் தரங்கள் சிறந்த பிரயோகக் கோட்பாடுகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்து நடை முறைப்படுத்துவதற்கான வலியுறுத்தல் காணப்படுகின்றது.

மூலதனக் கணக்கினை தாராளப்படுத்து வதற்கான ஒழுங்கானதும் முன்னெச்சரிக்கையுடயதுமான அணுகுமுறை மற்றும் முறைகளின் சீர்திருத்தங்களு க்கான நிறுவன ரீதியான ஒழுங்குபடுத்தல்கள் என்பனவற்றின் மீது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கருத்தின் முக்கியத்துவத்தினையும் தொடர்பினையும் நாணய நெருக்கடியின் கடுமையானதும் சிக்கலானதுமான தன்மை வற்புறுத்திக் கூறுகின்றது. இவ்வாண்டில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும், படுகடன் ஒழிப்புக்கான பயன்தரு வழிமுறைகள், பெருமளவு கடன்பாட்டுக்குள்ளான வறிய நாடுகளுக்கான முறைமையான படுகடன் செயற்றிட்டம் மற்றும் சிறந்த அமைப்பு முறையிலான முரண்பாட்டுப் பின்னான நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் என்பனவற்றுக்கான தேவையை வலியுறுத்தின.

இதே வேளை, பன்னாட்டு நாணய முறையில்

வற்புறுத்துவதாக உள்ளது.

## வெளிநாட்டுத்துறை நிகழ்வுகள்

1998இல் இலங்கையின் சென்மதி நிலுவை கலப்பான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சி தன்னியக்க சமநிலைப்படுத்தியாகத் தொழிற்பட்டு, ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மெதுவான போக்கினால் வர்த்தக நிலுவையின் மீது ஏற்பட்ட பாதகமான தாக்கத்தினை எதிரீடு செய்ய உதவியது. வர்த்தக மற்றும் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை மேலும் வீழ்ச்சியடைந்தமையானது 1998 இல் ஐ.அ.டொலர் 37 மில்லியன் கொண்ட திரண்ட சென்மதி நிலுவை மிகைக்கு வழிவகுத்தது. உலக ஏற்றுமதிகளில் மிகக் கூடியளவு சுருக்கம் காணப்பட்ட போதும், இலங்கையின் ஏற்றுமதிகள் 1997 இன் 13 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 2 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்யக் கூடியனவாக இருந்தன. மந்தமடைந்த உலக சந்தை நிலைமைகளின் கீழ் மசகெண்ணெய், கோதுமை, வளமாக்கி மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதி விலைகள் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தமையினால் இறக்குமதிகளின் பெறுமதி சிறிதளவில் (0.5 சதவீதம்) அதிகரித்தது. பணிகள் கணக்கு 1997 இன் ஐ.அ.டொலர் 159 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 143 மில்லியன் கொண்ட மிகையை உருவாக்கியது. தனியார் மாற்றல்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சி 1990 இன் வளைகுடாப் போரினால் குவைத்திலிருந்து இடம் பெயர்ந்த இலங்கை வேலையாட்களின் பேரில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 78 மில்லியன் கொண்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் என்பன நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை 1997இன் ஐ.அ.டொலர்

**வரைபடம் 1.7**
**தெரிந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுத் துறைக் குறிகாட்டிகள்**

**வரைபடம் 1.7.1**
**சென்மதி நிலுவை**




**வரைபடம் 1.7.2**
**பயன்தரு செலாவணி வீதங்கள்**
(1995 = 100)



சிறப்புக்குறிப்பு 2

## நாணய நிலைமைச் சுட்டெண்

மத்திய வங்கிகள் கொள்கையை வழிப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு மற்றும் இடையீட்டு இலக்குகளைப் பயன்படுத்துகின்றது. இறுதி இலக்குகள், பணவீக்கம் மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் போன்ற இறுதி இலக்குகளின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் நாணயக் கருவிகளின் மீது மத்திய வங்கி மாற்றங்களைச் செய்யும் பொழுது பல்வேறு வழிகளூடாக மாற்றங்கள் ஏற்படக்கூடும். நாணயக் கொள்கையின் மீது மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய இரு முக்கிய வழிகள் என இனம் காணப்பட்டுள்ள வட்டி வீதங்களும் செலாவணி வீதங்களும் இறுதி இலக்குகளுக்கு[1] மாற்றப்பட்டுள்ளன. ஆகவே வட்டி வீதங்களும் செலாவணி வீதங்களும் தொழிற்பாட்டு இலக்குகளாக தொழிற்பட முடிவதுடன் இதனை நாணயக் கொள்கையை வழிப்படுத்துவதற்கும் பயன்படுத்த முடியும். வட்டி வீதங்களினதும் செலாவணி வீதங்களினதும் கூட்டாகவுள்ள நாணய நிலைமைச் சுட்டெண்ணானது தொழிற்பாட்டு இலக்காக பயன்படுத்தக் கூடியதாகும்.

பணவீக்கத்தினையும் பொருளாதார வளர்ச்சியையும் நிர்ணயிக்கின்ற காரணிகளான கூட்டுக் கேள்வி மற்றும் நிரம்பலின் மீது வட்டிவீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் இரண்டும் செல்வாக்குச் செலுத்துகின்றன. வட்டி வீதங்களிலேற்படும் அதிகரிப்பு முதலீடு மற்றும் நுகர்வு அதேபோன்று இன்னொரு கோணத்தில் இருந்து பார்க்கையில் வட்டிவீதங்களில் ஏற்படும் குறைப்பு செலாவணி வீதங்களில் ஏற்படும் தேய்வு ஆகிய இரண்டும் உயர்ந்த விலைகளுக்கு இட்டுச் செல்கின்றன. வட்டிவீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் ஆகிய இரண்டும் கொள்கை மாற்றங்களுக்கு இசைவாக நடப்பதனால் இரு மாறிலிகளும் இறுதி இலக்கின் மீது தாக்கத்திைக் கொண்டுள்ளன. இரு மாறிலிகளையும் தனிப்பட்ட முறையிலும் சுதந்திரமாகவும் கண்காணிப்பது போதுமானதல்ல. ஆகவே இரு மாறிலிகளினதும் நிறையேற்றப்பட்ட சராசரியான நாணய நிலைமைச் சுட்டெண்ணே மிகப் பொருத்தமான குறிகாட்டியாகவுள்ளது. எனவே நாணய நிலைமைச் சுட்டெண் கொள்கை வகுப்போர்க்கு ஒரு மாறிலிக்கு சிறிய மாற்றங்களையும் செய்யக் கூடிய நெகிழ்ச்சித் தன்மையை வழங்கியதுடன் சில சமயங்களில் சந்தை நிலைமைகளினால் தேவைப்படுத்தப்படுவதனால் மற்றையதற்கு ஈடு செய்யத்தக்க மாற்றங்களையும் செய்கிறது. நாணய மேலாண்மையின் பெருமளவு தலையீடு இல்லாமல் செலாவணி வீதங்கள் சுதந்திரமாக மாறுபடுவதற்கு விடப்படும்பொழுது இந் நெகிழ்ச்சித்தன்மை மிகப் பயன்மிக்கதாகவுள்ளது. நாணயக் கொள்கை மாற்றங்களின் தாக்கம் குறுங்கால வட்டி வீதங்களின் மீதும் (நாணய நிலைமைச் சுட்டெண்ணுக்குச் சமமாக)

போக்கையும் நாணய நிலைமைச் சுட்டெண்ணின் விரும்பத்தக்க போக்கையும் மதிப்பிடுகிறது. இரு போக்குகளும் குறிப்பிடத்தக்களவிற்கு விலகிச் செல்லுமிடத்து விலகிச் செல்வதனை அகற்றுவதற்கு மேலும் நாணயக் கொள்கை மாற்றங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அடிப்படைக் காலத்தில் நிலவிய வட்டி வீதங்களினதும் செலாவணி வீதங்களினதும் நிறையேற்றப்பட்ட விலகிச் செல்லலாக நாணய நிலைமைச் சுட்டெண் உருவாக்கப்பட்டுள்ளது. இது பணவீக்கம் நிலவிய அடிப்படைக் காலத்தின் மட்டத்திலிருந்து விலகிச் செல்வதன் அடிப்படையில் வட்டி வீதத்தினதும் செலாவணி வீதத்தினதும் அழுத்தத்தின் விலகிச் செல்லைல அளவிடுகின்றது. பொதுவாக, வட்டி வீதத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிறை 1 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் செலாவணி வீதத்துடன் இணைக்ப்பட்டுள்ள நிறை 1/W எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் விளக்கம் யாதெனில் வட்டி வீதத்தல் ஏற்படும் ஒரு சதவீதப் புள்ளியைக் கொண்ட அதிகரிப்பு செலாவணி வீதத்தில் காணப்படும் W சதவீத மாற்றத்தினைப் போன்று அதே தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பதேயாகும். நிறை பொருளாதாரத்தின் திறந்த தன்மையைப் பொறுத்ததாகும். சார்பு ரீதியில் குறைந்தளவான திறந்த பொருளாதாரங்கள் 10 இற்கும் உயர்வான நிறையைக் கொண்டிருக்கக் கூடிய வேளையில் (அதாவது வட்டி வீதங்களில் ஏற்படும் 100 அடிப்படைப் புள்ளி மாற்றம் செலாவணி வீதத்தில் ஏற்படும் ஒரு சதவீத மாற்றத்தின் 10 மடங்கு

உண்டியல் வீதம் பெயரளவு வட்டி வீதமாகப் பயன்படுத்தப்பட்டது. பெயரளவு வட்டி வீதங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் பணவீதத்தினைக் கழித்துவிடுவதன் மூலம் உண்மையான வட்டி வீதம் பெறப்பட்டது. பணவீக்கத்தின் மீது தற்போதுள்ள முன்னோக்கிய நியாயமான எதிர்பார்ப்பு என்ற எடுகோளின் மூலமாக எதிர்பார்க்கப்படும் பணவீக்கம் எதிர்கால ஒன்பது மாதங்களின்[4] மாதத்திற்கு மாத சராசரி பணவீக்க வீதமாகும். ஐந்து முக்கிய இறக்குமதி நாடுகளுடன் தொடர்பாக பயன்படுத்தப்படும் செலாவணி வீதங்கள் பயன்தரு செலாவணி வீதமாகும். அடிப்படைக் காலமாக 1993 சனவரி கொள்ளப்பட்டது. தொடர்பான கடந்துபோன காலம் ஒன்பது மாதங்களாகும். தொடர்பான நிறைகள் 9 மாத பிந்திய உண்மை வட்டிவீதங்களின் பின்னோக்கிய கணிப்பிலிருந்து நடைமுறைப் பணவீக்கத்தின் மீதான உண்மைப் பயன்தரு செலாவணி வீதத்திலிருந்தும் பெறப்பட்டன. எனவே நாணய நிலைமைச் சுட்டெண்ணிலுள்ள செலாவணி வீத அசைவுகளுக்கான நிறையானது (நாணய நிலைமைச் சுட்டெண் விகிதம் அல்லது W) உண்மை வட்டி வீதங்களின் தேய்வுக் குணகத்திற்கும் பயன்தரு செலாவணி வீதத்திற்குமிடையிலான[5] விகிதமாகும். மதிப்பிடப்பட்ட நாணய நிலமைச் சுட்டெண் விகிதம் 1.5 ஆக அமைந்து சார்பு ரீதியில் வெளிநாட்டுத்துறைக்கான உயர்ந்த இலங்கையின் வெளிப்படுத்துகையை எடுத்துக்காட்டியது.

வரைபடம் 1 வட்டி வீதத்தினதும் செலாவணி வீதத்தினதும் நடத்தையைக் காட்டுகின்றது. செலாவணி வீதத்தின் மேல் நோக்கிய விலகிச் செல்லலானது

பயன்படுத்துகின்றதேயன்றி செலாவணி வீதங்களையும் வட்டி வீதங்களையும் நிர்ணயிப்பதற்கான தொழில்நுட்ப வழிமுறையாகப் பயன்படுத்தவில்லை. இது வட்டிவீதங்களிலும் செலாவணி வீதத்திலும் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்தும் தோன்றும் கூட்டுக்கேள்வி மற்றும் நிரம்பல் மாற்றங்களின் காரணமாக பணவீக்கத்தின் மீதான அழுத்தங்களை அளவிடுகின்றது. ஆகவே நாணய நிலைமைச் சுட்டெண் முனைப்பான பணவீக்கத்தின் தீர்க்கதரிசியல்ல. முனைப்பான பணவீக்கம் என்பது நாணய நிலைமைச் சுட்டெண்ணினால் எடுத்துக் காட்டப்பட்ட அழுத்தங்களினதும் தன்னிச்சையான நுகர்விலும் வானிலையுடன் இணைந்து உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற நிரம்பல் அதிர்வுகளினதும் இணைந்த விளைவாகும். நாணய நிலைமைச் சுட்டெண் நாணயக் கொள்கையின் அடிப்படை அளவு முறையாகக் கருதப்படக்கூடாது. இது ஒரு தொழிற்பாட்டு இலக்கு மட்டுமேயாகும். நாணய நிலைமைச் சுட்டெண் சில தொழில்நுட்ப ரீதியான பின்னடைவுகளையும் கொண்டுள்ளது. நாணய நிலைமைச் சுட்டெண்ணிற்குள் வட்டி வீதம் மற்றும் செலாவணி வீதம் என்பனவற்றைவிட கூடுதலான அளவில் மாறிலிகள் உள்ளடக்கப்பட வேண்டுமா என்பது பற்றி தெளிவாகக் குறிப்பிடப் படவில்லை. இதன் கூறுகளினது மற்றைய தொடர்பான நிறைகளை மதிப்பீடு செய்வதில் காணப்படும் இடர்பாடுகளினால் இது பாதிக்கப்படுகின்றது. நாணய நிலைமைச் சுட்டெண்ணில் மாறிலிகளை உள்ளடக்குவது பற்றிய நாணய நிலைமைச் சுட்டெண்ணிற்காக மிகத்

வங்கி நாணயக் கொள்கையின் கருவியாக நாணய நிலைமைச் சுட்டெண்ணைப் பயன்படுத்துவதனை 1999 பெப்புருவரியில் கைவிட்டது. ஆசிய நெருக்கடியின் விளைவாக நியூசிலாந்தின் செலாவணி வீதம் தேய்வடைந்ததுடன் இவ்வீழ்ச்சிக்குப் பொருத்தமாக வட்டி வீதங்களையும் உயர்த்த வேண்டியிருந்தமையின் மூலம் நாணய நிலைமைச் சுட்டெண்ணின் விரும்பத் தக்க போக்கு பேணப்பட்டது. வட்டி வீதங்களில் ஏற்பட்ட மிகக் கூடிய உயர்வு பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவிற்கு பலவீனப்படுத்தியுள்ளது. நியூசிலாந்து ஒதுக்கு வங்கி தற்பொழுது வட்டி வீதங்களில் தேவையான மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கு மிகக் கூடியளவிற்கு தளர்த்தப்பட்ட அணுகுமுறைகளையே பின்பற்றுகின்றது.

நாணய மற்றும் செலாவணிக் கொள்கைகளை நிர்ணயிப்பதற்கு நாணய நிலைமைச் சுட்டெண்ணை ஒரு தொழில் நுட்பக் கருவியாகப் பயன்படுத்துவது மதியுடைய செயலாக இல்லாத போதும் இது கொள்கைத் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கும் எதிர்காலக் கொள்கைப் பணிப்புரைகளை வழிப்படுத்துவதற்கும் பயன்மிக்க கோட்பாட்டு ரீதியான வரைச் சட்டமொன்றை வழங்குகின்றது.

வரைபடம் 1
1993 சனவரியின் மட்டத்திலிருந்து உண்மை வட்டி வீதங்களும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதங்களின் விலகிச்செல்லும், நாணய நிலமைச் சுட்டெண்ணும்



393 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 289 மில்லியனுக்கு குறைக்க உதவின. மொ.உ.உற்பத்தியின் விகிதமாக நடைமுறைக் கணக்குப்பற்றாக்குறை 1997 இன் 2.6 சதவீதத்திலிருந்து 1998இல் 1.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு நீண்டகால தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் தொடர்ந்து அதிகரித்த வேளையில் பங்குச் சந்தையூடாக குறுங்கால மூலதனத்தின் தேறிய வெளிப்பாய்ச்சல் காணப்பட்டது. உள்நாட்டு நாணய மற்றும் செலாவணி வீத கொள்கைகள் நிதியியல் சந்தை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு வலுவுள்ளதாக இருந்தமையினால் இலங்கையின் செலாவணி மற்றும் பணச் சந்தைகள் சார்பு ரீதியில் உறுதிப்பாடுடையனவான இருந்தன.

1998இல் நிதியியல் கணக்குகளின் தேறிய உட்பாய்ச்சல்கள் குறைவாக விளங்கி, 1998இன் ஐ.அ.டொலர் 56 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1997இல் ஐ.அ.டொலர் 301 மில்லியன் தொகை கொண்ட தனியார் மயமாக்கல் பெறுகைகள் உட்பட பெருமளவு உட்பாய்ச்சல்கள் காணப்பட்ட தன்மையைப் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைப்பு பங்குச் சந்தையூடாக குறுங்கால மூலதன வெளிப்பாய்ச்சல் என்பனவற்றின மத்தியிலும் 1998 இல் தேறிய குறுங்கால தேறிய மூலதன வெளிப்பாய்ச்சல்கள் வெளிப் பாய்ந்தமையுமே காரணமாகும். 1998இல் வெளிநாட்டு நேரடி முதலீடு உட்பட நீண்டகால தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் அதிகரித்தமை முக்கியமான விடயமாகும். அரசிற்கான நீண்டகால சலுகை ரீதியான மூலதன உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் அதிகரித்து உயர்ந்த

வெளிப்பாய்ச்சல்களே காரணமாகும்.

யென்னில் ஏற்பட்ட உயர்வு தனியாக படுகடன் இருப்பினை ஏறத்தாழ ஐ.அ.டொலர் 200 மில்லியனால் அதிகரித்தது. படுகடன்/மொ.உ.உற்பத்தி விகிதம் 56 சதவீதமாக இருந்தது. இவ்வதிகரிப்பில் ஏறத்தாழ 1சதவீதப் புள்ளி கொண்ட அதிகரிப்பிற்கு யென்னின் உயர்வே காரணமாகும். மொத்தப் படுகடனில் குறுங்காலப் படுகடன் இருப்பு 6 சதவீதத்திற்கு மாத்திரம் வகை கூறியது. 1998இல் இலங்கையின் படுகடன் பணித் தீர்ப்பனவு விகிதம் 1997இனைப் போன்று 11 சதவீதமாக இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி செலாவணிச் சந்தையில் நடுநிலையாளராகத் தொழிற்பட்டு செலாவணிவீத நெகிழ்ச்சித் தன்மையைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. இருபத்துநான்கு நாணயங்களைக் கொண்ட கூடைக்கான உண்மைப்பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண் உள்ளிட்ட நாணயச்சந்தை மற்றும் செலாவணி வீதக் குறிகாட்டிகள் பலவற்றை பயன்படுத்தி செலாவணி வீத நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டன. ஐ.அ.டொலருக்கான கொள்வனவு விற்பனை வீதங்களுக்கிடையிலான மத்திய வங்கியின் தொழிற்பாட்டு செலாவணிவீத அமைப்பு 2 சதவீதமாக இருந்தது. உலக நாணயச் சந்தைகள் 1997 இனைவிட மிக அடிக்கடி மாறும் தன்மையையுடையனவாக மாறின. ஐ.அ.டொலர்/யென் என்பனவற்றின் அடிக்கடி மாறும் தன்மை 1997 இனைவிட 1998இல் பெரும்பாலும் இருமடங்காகக் காணப்பட்டமைக்கு யப்பானில் உரிய நேரத்திற்கு முன் மீட்சி பெறுவதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்பட்டமையே காரணமாகும். 1998இல்

நிதியிடப் போதுமானதாக இருந்தன. அலுவல்சார் சொத்துக்களையும் வர்த்தக வங்கிகளின் அத்தகைய சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 2,907 மில்லியனாக விளங்கி 5.9 இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாக இருந்தன.

## 1.9 நிதியியல்துறை

பெருமளவிற்கு உறுதியற்ற வெளிநாட்டு சூழலொன்றில் நாணயக் கொள்கையை நடத்திச் செல்ல வேண்டியிருந்தது. உலகளாவிய நிதியியல் சந்தை நெருக்கடிகளின் பின்னணியில் உலக வங்கித் தொழில் மற்றும் நிதியியில் சந்தைகள் மிகப்பாரிய உறுதிப்பாட்டின்மைக்கு உட்பட்டிருந்தன. உள்நாட்டுப் பக்கத்தில் பாரிய இறைப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு அரசிற்கு மிகக் கூடியளவு மூலவளங்கள் தேவைப்பட்டன. எனவே, 1998இன் பின்னரைப் பகுதியில் பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டபோதும், வட்டிவீதங்களைக் குறைப்பதற்காக மேலும் தளர்வான நாணயக் கொள்கையை மேற்கொள்ள முடியவில்லை.

பிராந்திய நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையும் 1998 இன் தொடக்கத்தில் காணப்பட்ட ஓரளவு உயர்வான உள்நாட்டுப் பண வீக்கமும் ஆண்டின் முதற் சில மாதங்களில் இறுக்கமான நாணயக் கொள்கையைத் தேவைப்படுத்தின. இரண்டாம் காலாண்டில் அதாவது மே நடுப்பகுதியில் மீள் கொள்வனவு வீதத்தினை 12.00 சதவீதத்திலிருந்து 11.65 சதவீதத்திற்கு குறைத்தமையின் மூலம் ஓரளவு தளர்வு பின்பற்றப்பட்டபோதும், வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் புத்துயிர்பெற்ற அடிக்கடிமாறும் தன்மையின் காரணமாக கொள்கையை மேலும் இறுக்கமாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. எனினும் மீண்டும் உயிர் பெற்ற அடிக்கடிமாறும் பன்னாட்டுத் தன்மையும் அதனோடு தொடர்புபட்ட உள்நாட்டு ஊக நடவடிக்கையும் மேயில் மீள் கொள்வனவு வீதத்தினை 12.00 சதவீதத்திற்கு மீண்டும் உயர்த்துவதன் மூலம் நாணயக் கொள்கையை இறுக்கமாக்குவதற்கு மத்திய வங்கியைத் தூண்டின.

அண்மைய நிகழ்வுகள் நிலையான செலாவணி மற்றும் நாணயக் கொள்கையைப் பேண வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டின. உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளும் அதன் விளைவாகத் தோன்றிய பன்னாட்டு நாணயச் சந்தைகளின் அடிக்கடி மாறும் தன்மையையும் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைகளின் சில நிச்சயமற்ற தன்மைகளுக்கு வழியமைத்தன. ரூபாவில் பெருமளவு தேய்வினைத் தேவைப்படுத்துகின்ற சில தீர்க்கமான மூலகங்கள் சந்தையில் காணப்பட்ட நிலைமைகளுடன் 1998இலும் இது தொடர்ந்தது. தற்போதைய முகாமைப்படுத்தப்பட்ட மாறுபடும் முறையின் கீழ் பேரண்டப் பொருளாதார நிலைமைகளில் ஏற்படுகின்ற முக்கிய அடிப்படை மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் செலாவணி வீதங்கள் மாற்றமடைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவ்வப்போது செய்யப்படும் ரூபாவின் பெறுமானம் தேய்வு போன்றன அவசியமற்றவையாகும். எனினும் பணவீக்க வீதத்தில் வீழ்ச்சிப்போக்குக் காணப்பட்டபோதும், செலாவணிச் சந்தையில் தேவையற்ற தலையீடுகள் இல்லாமல் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தங்களை குறைப்பதற்கான எதிர் நடவடிக்கையாக குறுங்கால வட்டி வீதங்கள் உயர்வாக

விளங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. இதன்படி, சார்புரீதியில் செலவு குறைந்த அழைப்புச் சந்தை நிதியங்களை வெளிநாட்டு நாணயங்களின் ஊகக் கொள்வனவுகளுக்கு பயன்படுத்துவதனை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன் மீள் கொள்வனவு வீதம் 1997 திசெம்பரில் 200 அடிப்படைப் புள்ளிகளினாலும் 1998 சனவரியில் மேலும் 100 அடிப்படைப்புள்ளிகளினாலும் உயர்த்தப்பட்டன. நாணயக் கொள்கையை இறுக்கமாக்க உதவும் பொருட்டு மத்திய வங்கியின் கழிவு மற்றும் மீள் கழிவு வீதங்களும் இவ்விரு வீதங்களுக்குமிடையிலான விளிம்பும் சீராக்கம் செய்யப்பட்டது. இவ்வழிமுறைகள் கிழக்காசியாவின் நிதியியல் சந்தைகளிலும் செலாவணி வீத உறுதிப்பாட்டிலும் அடையப்பட்ட சில முன்னேற்றங்களுடன் சேர்ந்து ஊக அழுத்தங்களைக் குறைப்பதில் வெற்றிகண்டன. வர்த்தக வங்கிகள் ஐ.அ.டொலர் 54 மில்லியனை மத்திய வங்கிக்கு மாச்சிலும் ஏப்பிறலிலும் விற்பனை செய்தன. எனினும் ஆண்டினை முழுமையாகக் கருத்திற் கொள்ளும்போது மத்திய வங்கியானது சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய விற்பனையாளராகக் காணப்பட்டது.

நாணயக் கொள்கையின் முதன்மைக் கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் விளங்கியதுடன் மீள் கொள்வனவு வீதம் முதன்மை சமிக்ஞை பொறி முறையாகவும் தொழிற்பட்டது. மேயிலிருந்து வர்த்தக வங்கிகள் அவற்றின் திறைசேரி முறி உடைமைகளை தமது திரவச் சொத்துக்களின் ஒரு பகுதியாக உள்ளடக்குவதற்கும் அவற்றை மத்திய வங்கியுடனான இரண்டாம் நிலைச் சந்தைத் தொழிற்பாடுகளில் அவற்றினது திரவ முகாமைத்துவதிற்காகப் பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டன. நவெம்பரில்,

**வரைபடம் 1.10**
**வட்டி வீதங்கள்**

**வரைபடம் 1.10.1**
**குறுங்கால வட்டி வீதங்கள்**




**வரைபடம் 1.10.2**
**வட்டி வீதங்கள்**
(உண்மை வீதங்கள் புள்ளிக்குப் புள்ளி பணவீதங்களை அடிப்படையாகக் கொண்டன)



வரைபடம் 1.11
அரச பிணைகளுக்கான விளைவு வளைகோடு




நடுத்தர, நீண்டகால கொடுகடன் வசதி அல்லது எந்த ஒரு குறுங்கால வசதியின் கீழும் மீள் நிதியிடல்களை வழங்குவதில்லை என்ற அதன் கொள்கையை மத்திய வங்கி தொடர்ந்தும் பின்பற்றியது. கடந்த காலத்தில் வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் வெளிநின்ற மட்டம் 1997 இறுதியின் ரூ.1,691 மில்லியனிலிருந்து 1998 இறுதியில் ரூ.1,122 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு மத்திய வங்கிக்கான மீள் கொடுப்பனவு தொடர்ந்தும் இடம் பெற்றமையே காரணமாகும்.

## பணநிரம்பல்

திரண்ட விரிந்த பணநிரம்பல் ( $M_{2b}$ ) அதாவது வெ.நா.வ.தொழில் பிரிவுகளை உள்ளடக்கிய விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சி 1997இன் 15.6 சதவீதத்திலிருந்து 1998இல் 13.2 சதவீதத்திற்கு

வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு நிதியியல் சந்தைகளில் தொடர்ந்து காணப்படும் நிச்சயமற்ற தன்மையும் இலங்கையின் ஏற்றுமதிகள் மெதுவடைந்தமையும் வெ.நா.வ.தொழில் பிரிவுகளின் கடன் வழங்கல் சுருக்கமடைய வழி வகுத்ததுடன் அவற்றின் தேறிய வெளிநாட்டு வெளிப்படுத்துகைகளையும் குறைத்தது. வெளிநாட்டு செலாவணிச் சந்தைகளில் காணப்பட்ட அடிக்கடி மாறும் தன்மையும் சார்பு ரீதியில் குறைவான உள்நாட்டு வட்டி வீதங்களும் வெ.நா.வ.தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்பாட்டினை உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களுக்கு கவர்ச்சி குறைந்ததாக்கியது. வெ.நா.வ.தொ. பிரிவுகள் ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன் ஒன்றை அரசிற்கு வழங்குவதற்காக அவற்றின் சில நிதிகளைப் பயன்படுத்தின. உள்நாட்டுப் பிரிவுகளிலிருந்தான கொடுகடன் விரைவான வீதத்தில் அதாவது 1997இன் 11.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1998இல் 12.7 சதவீதத்திற்கு விரைவாக வளர்ச்சியடைந்து வெ.நா.வ.தொழில் பிரிவுகளின் கொடுகடன் விரிவாக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்தது. தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட கூடுதலான அதிகரிப்புக்கள் உள்நாட்டு வர்த்தக வங்கிகளிலிருந்து கிடைத்தனவேயன்றி வெளிநாட்டு வங்கிகளிலிருந்தல்ல என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் 1997 இன் 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து 1998இல் 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெற்றோலியத்தினதும் கோதுமையினதும் தாழ்ந்த

**அட்டவணை 1.5**

**நிதியியல் நிறுவனங்களிலிருந்து தனியார்துறை பெற்ற கொடுகடன்கள் (அ)**

ரூபா மில்லியன்

| விடயம் | 94 திசெ. | 95 திசெ. | 96 திசெ. | 97 திசெ. | 98 திசெ(அ) |
|---|---|---|---|---|---|
| வர்த்தக வங்கிகள் | 163,278 | 210,704 | 229,771 | 263,139 | 294,064 |
| உள்நாட்டுப் பிரிவுகள் | 140,004 | 179,825 | 193,842 | 216,030 | 243,549 |
| அரச வங்கிகள் | 85,728 | 105,781 | 106,007 | 111,650 | 122,512 |
| ஏனைய வர்த்தக வங்கிகள் | 54,276 | 74,044 | 87,835 | 104,380 | 121,037 |
| வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் | 23,274 | 30,879 | 35,929 | 47,109 | 50,515 |
| அரச வங்கிகள் | 9,813 | 10,047 | 10,393 | 14,649 | 16,734 |
| ஏனைய வர்த்தக வங்கிகள் | 13,461 | 20,832 | 25,536 | 32,460 | 33,781 |
| ஏனைய நிதி நிறுவனங்கள் | 33,960 | 38,023 | 62,670 | 73,627 | 89,675 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளும் | 1,872 | 2,406 | 2,888 | 3,397 | 3,750 |
| உரிமம்பெற்ற சிறப்பு வங்கிகள் | 23,987 | 28,349 | 46,118 | 54,053 | 66,938 |
| அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் (ஆ) | 16,935 | 20,037 | 31,411 | 38,023 | 47,320 |
| தேசிய சேமிப்பு வங்கி | 3,108 | 3,441 | 8,537 | 8,150 | 9,495 |
| வீடமைப்பு (இ) | 3,945 | 4,871 | 6,170 | 7,344 | 8,150 |
| ஏனைய சேமிப்பு, அபிவிருத்தி வங்கிகள் (ஈ) | - | - | - | 536 | 1,972 |
| நிதிக் கம்பனிகள் | 8,100 | 7,269 | 13,664 | 16,178 | 18,987 |
| மொத்த தனியார் துறைக் கொடுகடன் | 197,238 | 248,727 | 292,441 | 336,766 | 383,739 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியையும், தேசிய அபிவிருத்தி வங்கியையும் உள்ளடக்குகின்றது.
(இ) அரச ஈட்டு முதலீட்டு வங்கியையும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்குகின்றது.
(ஈ) பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியையும் சனச அபிவிருத்தி வங்கியையும் உள்ளடக்குகின்றது.

குறைவானதாகும். இதன்படி, விரிந்த பணப் பெருக்கி 1997 இறுதியின் 3.98 சதவீதத்திலிருந்து 1998 இறுதியில் 4.07 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமை 1998 இல் நாணயக் கொள்கையில் காணப்பட்ட சிறிதளவு இறுக்கத்தினைப் பிரதிபலிப்பதாயிருந்தது.

மேம்பட்ட ஒருங்கிணைப்பு, நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு வரைச் சட்டத்தின் வலுப்படுத்தல் என்பனவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும்.

1998 இல் எய்தப்பெற்ற பொருளாதார

நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள், அரசுக்குச் சொந்தமான நிதியியல் நிறுவனங்களின் வர்த்தக ரீதியாக நிலைத்து நிற்கும் தன்மையை மேம்படுத்தல், தொழிற் சந்தைகளை மேலும் நெகிழ்ச்சியுடையதாக்கி தொழிலாளர் உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தல், அரசாங்க சேவையை மேலும் திறமையும் உற்பத்தி யாக்கமும் உடையதாக மாற்றுவதற்கான சீர்திருத்தங்கள், வரவு செலவுத்திட்ட சுமையினைக் குறைப்பதற்காக ஓய்வூதிய சீராக்கங்களும் பணவீக்கத்தின் ஊடாக ஓய்வூதிய நன்மைகள் தேய்வடைவதனைத் தவிர்த்தலும், வர்த்தக ரீதியில் நிலைத்து நிற்பதை நோக்கமாகக் கொண்ட அரச தொழில் முயற்சி சீராக்கங்கள், வரி அமைப்பு முறையினை இலகுவாக்குவதற்கான வரிச் சீர்திருத்தங்கள், திரிபுகளைக் குறைத்து விரி விசையினை மேம்படுத்தல் என்பனவற்றை அவை உள்ளடக்குகின்றன. இதற்கு மேலதிகமாக உலகின் அண்மைய நிதியியல் சந்தை நெருக்கடியின் சூழலில் நிதியியல் சிறப்புச் செயலாற்றத்திற்கும் கம்பனிகளின் கண்காணிப்பை மேம்படுத்துவதற்கும் அதிகளவிலான வலியுறுத்தல் தேவைப்படுகின்றது. சில விடயங்களில, குறிப்பாக நிதியியல் சந்தைச் சீர்திருத்தங்கள், நிதியியல் சந்தையின் உறுதிப்பாட்டை மேம்படுத்தல், தனியார் துறையினரின் பங்கேற்பின் ஊடாக அரச தொழில் முயற்சி சீராக்கங்கள், தீர்வைகள் உட்பட வரிச் சீர்திருத்தங்கள் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன.எனினும் ஏனைய விடயங்களின் முன்னேற்றம் போதுமானதாக இல்லை. இதே வேளையில் வெளிப்படுத்திக் காட்டப்படவேண்டிய பல குறுகிய கால அறைகூவல்களும் மோசமான போக்குகளும் காணப்படுகின்றன.

ஓரளவு மீட்சி பெறும் என்பதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி அளவுகள் 4.7 சதவீதத்தினால் அதிகரிக்கும் என்பதும் தற்போதைய எதிர்பார்ப்புக்களாகும். எனினும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் முழுமையான மீட்சி இடம்பெறும் என கருத இயலாது. உலகப் பொருளாதாரத்துடன் அதிகூடிய ஒருங்கிணைப்புடன் விரைந்த பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு சிறிய திறந்த பொருளாதாரங்களுக்கு இது ஒரு அறைகூவலாக அமையும். எனவே உலக சந்தையில் மந்த நிலைமை தொடர்ந்தும் காணப்படுவதானது 1999இல் பொருளாதார வளர்ச்சியையும் தொழில் வாய்ப்பு உருவாக்கத்தையும் மெதுவடையச் செய்யலாம்.

1998இல் அரசிறைப் பற்றாக்குறையின் பாரிய விரிவாக்கமானது ஓரளவு குழப்பத்தை உண்டு பண்ணுவதாகும். ஏற்றுமதிக் கேள்வி மற்றும் தேசிய வருமானங்கள் என்பன மெதுவடைகின்றமையின் காரணமாக அரசின் அரசிறை வீழ்ச்சியடைந்து செல்லும் மந்தமான உலக நிலைமையொன்றில் அரசிறைப் பற்றாக்குறையின் சில விரிவாக்கங்கள் தவிர்க்க முடியாதமையாகக் காணப்பட்டன. 1998இல் இலங்கையில் பகுதியளவில் இந்த நிலைமையே காணப்பட்டது. மந்த நிலைமையொன்றுக்கான கேய்ன்சின் கோட்பாடானது வீழ்ச்சியடையும் ஏற்றுமதிக் கேள்வியை எதிர் கொள்வதற்காக உள்நாட்டுக் கேள்வியை உந்தச் செய்யும் விரிவுத்தாக்க அரசிறைக் கொள்கையாகும். விரிவுத்தாக்க அரசிறைக் கொள்கைகளின் இறுதிக் குறிக்கோள் உள்நாட்டு தொழில் நிலையினையும் வருமானங்களையும் பேணுவதற்கு உதவுவதாகும் என்பது இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

தனியார் துறையினர் நம்பிக்கை குறைவடைவதைத் தவிர்த்தல் என்பனவற்றிற்காக அரசிறைப் பற்றாக்குறைக் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசரத் தேவை காணப்படுகின்றது.

மந்தமான உலக சந்தை நிலைமைகளின் கீழ் இறக்குமதி விலைகளில் குறிப்பாக மசகெண்ணெய், கோதுமைத் தானியம், வளமாக்கிகள் மற்றும் சீனி என்பனவற்றின் இறக்குமதி விலைகளில் கடுமையான வீழ்ச்சியொன்றினால் நாடு நன்மையடைந்ததன் காரணமாக விரிவாக்கப்பட்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் பணவீக்கத்தாக்கங்கள் 1998இல் தெளிவாக உணரப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ரூபாவின் பெறுமானத் தேய்வின் மத்தியிலும் (ஐ.அ.டொலருக்கு எதிராக 9.6 சதவீதம்) இறக்குமதிச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கு விலைக் குறைப்புக்கள் உதவியதோடு வங்கித் தொழில் முறைக்கு மேலதிக மூலவளங்களைக் கிடைக்கச் செய்தது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முக்கிய பண்டங்களின் விலைக் குறைப்பினால் விடுவிக்கப்பட்ட மூலவளங்களும் தனியார் துறைக் கடன்களின் சார்பு ரீதியில் மெதுவான வளர்ச்சியையும் வட்டி வீதங்களில் மிகையான அழுத்தத்தை ஏற்படுத்தாது, விரிவு படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறையின் பாரிய பாகமொன்றினை நிதியிடுவதற்கு வங்கித்தொழில் முறைக்கு இயலச் செய்தது என்பது தெளிவாகின்றது. இறக்குமதி விலைகளில் மேலும் பாரிய குறைப்பொன்று இடம் பெறுவதற்கில்லை என்பதை தற்போதைய போக்குகள் குறித்துக்காட்டுகின்றன. இந்தச் சூழலில் பணவீக்கத்தின் அண்மைக்கால சாதகமான போக்குகளை நேர் மாற்றம் செய்யாது விரிவுத்தாக்க

1999ஆம் ஆண்டுக்கான உயர் பொருளாதார வளர்ச்சிக் கான வாய்ப்புக்களின் மோசமான நிலைமையையும் தரப்பட்டிருக்கும்போது 1999இல் அரசிறைப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 7.5 சதவீதத்திற்குக் ணகுறைப்பதற்கான வழி முறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன் மூலம் 2000ஆம் ஆண்டில் அரசிறையை மேலும் வலுப்படுத்து வதற்கான இலக்குகளை மேற் கொள்ள முடியும். பொருளாதாரத்தில் பணவீக்க எதிர்பார்ப்புக்களைக் குறைக்கும் வகையில் பண வீக்கத்தில் தாக்குப் பிடிக்கக்கூடிய குறைப்பொன்றினை இலங்கை இன்னமும் எய்தவில்லை. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி சராசரி நுகர்வோர் விலைப் பணவீக்கம் 1989 – 93 ஐந்தாண்டுக் காலப்பகுதியின் 13.5 சதவீதத்திலிருந்து 10.2 சதவீதத்திற்குக் குறைவடைந் துள்ள போதிலும் உள்ளேயேயான பணவீக்கச் சாய்விலிருந்து நாடு தன்னை மீட்டுக்கொள்ள வேண்டுமாயின் பணவீக்கத்தினை 5 சதவீதத்திற்குக் குறைவான மட்டமொன்றுக்கு ஒரு சீராகக் குறைத்தல் வேண்டும். இலங்கையின் பணவீக்க வீதமானது பொதுவாக அதனது வர்த்தகப் பங்காளர்களினதும் போட்டியாளர்களினதும் சராசரி பணவீக்க வீக்கத்தினை விட உயர்வானதாகும். உலக சந்தையில் இலங்கை போட்டித்தன்மையுடன் இருப்பதை இயலச் செய்வதற்காக செலாவணி வீதத்தின் ஆண்டொன்றுக்கு 5 – 6 சதவீத பெறுமானத் தேய்வுக்கு இது இட்டுச் சென்றுள்ளது. 1997 ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இலங்கை தனது ஏற்றுமதி இறக்குமதிகளில் 70 சதவீதத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியாகக்

பிடிக்கக் கூடிய அளவுக்குக் குறைப்பதற்கான வழிமுறைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். போட்டிச் சூழலொன்றில் தொழிலாளர்கள் மற்றும் தொழில் தருநர்கள் ஆகிய இரு சாரரையும் பாதுகாக்கும் வகையில் தொழிற் சந்தையில் உள்ள கட்டமைப்புப் பலவீனங்களை அகற்றி தொழிலாளர் சந்தையை அதிகளவு நெகிழ்ச்சியுடையதாக்குவதற்கான ஏனைய வழிமுறைகளும் இவற்றுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அமைப்புச் சீராக்கக் கொள்கைகளில், தாக்குப் பிடிக்கக்கூடிய சமூகப் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்ட ஓய்வூதியச் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். ஏனைய சமூக பொருளாதார மேம்பாடுகளுடன் இணைந்து குடிப்பரம்பல் மாற்றமானது அபிவிருத்தியடைந்துவரும் ஏனைய பல நாடுகளைவிட குடித்தொகை வளர்ச்சி வீதத்தை கணிசமாகக் குறைவடையச் செய்துள்ளது. எனினும் ஆண்டொன்றுக்கு குடித்தொகையின் 200,000 திற்கும் மேலான அதிகரிப்பானது மட்டுப்படுத்தப்பட்ட ஏனைய மூலவளங்களின் மீது சுமையொன்றாக மாறியுள்ளது. குடித்தொகையின் தற்போதைய அமைப்பு முறையுடனும் போக்குகளுடனும் தொடர்புடைய சமூகப் பொருளாதார பிரச்சனைகள் பல காணப்படுகின்றன. தொழில் வாய்ப்பின்மை, காணிகள் துண்டாக்கப்படல், கல்வி, சுகாதாரம், வீடமைப்புப் பிரச்சனைகள் போன்ற அதி உயர் செலவினைக் கொண்ட சமூக நலன்புரி விடயங்கள் மற்றும் முதுமையடையும் சனத்தொகை என்பன வெகுவிரைவில் கருத்திற் கொள்ளப்பட

தயாரிபாளர்களுக்கிடையே மேலும் நிச்சயமற்ற தன்மையினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. புடவை மற்றும் ஆடைகளின் உலக வர்த்தகத்தில் அனுமதிப் பங்கு முறையானது முக்கிய ஒழுங்கு முறைப்படுத்தும் கருவியாக இருந்து வந்துள்ளது. இப்பொழுது தோற்றம் பெற்றுள்ள பல்வேறு திட்டங்கள் உச்சப் பயன்பாட்டை எய்துவதற்கான அதிகூடிய மேற்பார்வை மற்றம் கண்காணிப்பை தேவைப்படுத்தும் இடைஞ்சல் மிக்க நடவடிக்கை முறைகளைக் கொண்டுள்ளன. ஆண்களினதும் சிறுவர்களினதும் புறச் சட்டைகள் மற்றும் மேலங்கிகள் போன்ற ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கான அனுமதிப் பங்குகள் மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்டதனால் ஐக்கிய அமெரிக்க நாடுகளினால் தடை விதிக்கப்படுவது சாத்தியமாவதைத் தவிர்ப்பதற்காக புடவை அனுமதிப்பங்குச்சந்தை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தமையினால் 1998 இல் இலங்கையில் அனுமதிப் பங்கு நிருவாகம் ஓரளவு குழப்பத்திற்கு உள்ளாகியது. புடைவகள் மற்றும் ஆடைகளுக்கான உருகுவே வட்ட உடன்படிக்கையின் கீழ் 2005 ஆம் ஆண்டில் அனுமதிப் பங்குமுறை அகற்றப்படும் வரையில் ஏற்கனவேயுள்ள பன்னாட்டு வர்த்தக வரைச் சட்டத்தின் கீழான உள்ளார்ந்த நன்மைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்காக அனுமதிப் பங்கின் உச்சப்பயன்பாடு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எனவே அனுமதிப் பங்கு நிருவாகம் செயல் திறனுடன் மேற்கொள்ளல் வேண்டும். அனுமதிப் பங்கு பயன்பாட்டின் நியதிகளில் அனுமதிப் பங்குகளின் ஏலத்தின் ஊடாக சந்தை அடிப்படையிலான அனுமதிப் பங்குப்பகிர்ந்தளிப்பு

சிறப்புக்குறிப்பு 3

# தகவல் தொழில்நுட்ப புதுமைகள்
# நிதியியல் துறைக்கான அறைகூவல்கள்

தொலைத் தொடர்பூட்டல் துறையில் தொழில் நுட்பவியல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தி உலகில் இடம்பெற்றுவரும் வர்த்தகம், வாணிபம் மற்றும் வங்கித் தொழில்களுக்கு தகவல் தொழில் நுட்பங்களை புகுத்துவதற்கு தூண்டுதல்களை வழங்குகின்றது. மின்னியல் வாணிபம் (ஈ வாணிபம்) ஏற்கனவே தொடங்கியிருப்பதுடன் இலங்கை போன்ற நாடுகள் இம் மாற்றங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும் அல்லது அவற்றிற்கு தற்போது கிடைத்துள்ள நல்ல வாய்ப்புக்களை அவர்களாகவே தவறவிட்டுவிட்டு பின் தங்கிய நிலையிருக்க வேண்டும். நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் அளவிலும் பெறுமதியிலும் வளர்ச்சி கண்டதுமன்றி, புதிய பரிமாணங்களையும் எட்டியுள்ளன. இக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றுவரும் முறைகளும் விரைவான மாற்றங்களுக்கு உட்பட்டுவருகின்றது. இம் மாற்றங்களை எதிர்ப்பதும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள தவறுவதும் தீங்கு பயப்பதாக மட்டுமன்றி பொருளாதார உபாயங்களுக்கும் சேதம் விளைவிக்கக் கூடும். இப்புதிய ஒழுங்குகளின் கீழ் பொருட்கள் மற்றும் பணிகள் இரண்டிலுமான உலக வர்த்தகத்தில் பங்கேற்க ஆயத்தமாகவுள்ள நாடுகள் பாரிய சந்தைப் மூலமாக இனிமேலும் காணப்படாது. இதற்குப் பதிலாக, கணனிகளும் தொடர்பூட்டல்களும் முக்கிய பங்கினை வகிக்கின்ற கட்டணத்தினை அடிப்படையாகக் கொண்ட பணிகள் வருமானத்தின் முக்கிய மூலங்களாக மாறிவருகின்றன. அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் காசு முகாமைததுவம், நிதிய மாற்றல்கள், கொடுப்பனவு முறைகள் மற்றும் தீர்ப்பனவு முறைகள் என்பனவற்றில் ஏற்பட்ட புதிய அபிவிருத்திகள் வங்கித் தொழில் முறையை உள்ளூர் முறைக்குப் பதிலாக உலகளாவிய முறைக்கு மாற்றியுள்ளன.

இதே போன்று, மின்னியல் நிதி மாற்றல் முறைகளினது அறிமுகமானது சில விடயங்களைப் பொறுத்தவரையில் சில்லறை வங்கி கிளையமைப பினை வங்கித் தொழில் பணிகளின் வழங்கலுக்கு தேவையற்றதாக்கியுள்ளது. நாளாந்த கொடுக்கல் வாங்கல் இயலாற்றல் நியதிகளில், வங்கிகள் இருவரிசை முறையை நோக்கி நகர்கின்றன. கடன்களை ஒழுங்கு படுத்தல் போன்ற தேர்ச்சி பெற்ற ஆளணியினரின் உள்ளீட்டை வேண்டிநிற்கும் சிக்கலான வங்கித்தொழில் பணிகளின் வழங்கலானது சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆளணியினர் பணிபுரியும் கிளை பிராந்திய அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. வழமையான

வழங்குகின்றன. சிறப்பு அங்காடிகள் பல் பொருள் விற்பனைக் கூடங்கள் என்பன இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய கணனித் தரவுகளை சேமித்து வாடிக்கையாளர் தொடர்பான மிகப் பெருந் தொகையான தரவுத் தளங்களைக் கொண்டுள்ளமையினால் வங்கிகள் செய்வதனைப் போன்று இவையும் வழமையான நிதியியல் பணிகளை வழங்குகின்றன. வழமையான நிதியியல் கருவிகளைக் கையாளும் தரகர்கள் அவர்களது பரந்த செயற்பரப்பினை வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கும் விரிவாக்கிக் கொண்டனர். மற்றும் சொத்துக்களின் விற்பனை மாற்றல் என்பனவற்றைக் கையாளுகின்ற உண்மைச் சொத்து முகவராண்மைகள் ஈட்டு வியாபாரத்திலும் அதிகளவில் ஈடுபட்டனர். இவை அனைத்துடன், எண்ணெய்க் கம்பனிகள் மற்றும் பல்தேசியக் கம்பனிகள் போன்ற இன்னும் பல வியாபார அமைப்புக்களும் வங்கித் தொழில் பணிகளை வழங்குவதற்கான நிதியியல் மூலவளங்களையும், தேர்ச்சியையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளன. இவர்களுக்குச் சாதகமாகவுள்ள இன்னுமொரு மேலதிகக் காரணி யாதெனில் ஒழுங்கு முறையாளர்களினாலும் வங்கி மேற்பார்வையாளர்களினாலும் வங்கிகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைத் தேவைப்பாடுகள் எதுவும் இவ்வமைப்புக்களைக் கட்டுப்படுத்தாது என்பதேயாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் நிதியியல் சந்தைகளில் இம்மாற்றங்கள் பரவுவதற்கு நீண்டகாலம் எடுக்காது. இலங்கையும் அடுத்த தசாப்த காலத்தில் இம் மாற்றங்களில் சிலவற்றை எடுத்துக்காட்டும். மத்திய வங்கி எண்ணியுள்ள தகவல் தொழில் நுட்பத்திலுள்ள முன்னேற்றங்கள் இச் செயல்முறையை விரைவுபடுத்தும். நேரடிப்பற்று மாற்றல்கள்களுக்காகவும், எதிர்ப்படிவ அறிமுகத்தினூடாக காசோலைத் தீர்ப்பனவு முறையினை வலுப்படுத்து வதற்காகவும் வங்கிக்குள் விதி முறைக்குட்பட்ட கணக்கீட்டு முறையை பின் பற்றுவதற்காகவும், முன்னணி நிதியில் சந்தைகளில் உள்ளதைப் போன்று உண்மை நேர மொத்த தீர்ப்பனவு முறையை அறிமுகப் படுத்துவதற்காகவும், தற்போதுள்ள முறைகள் உள்ளடக்கும் பகுதியை விரிவாக்குவதற்காக பங்களிக்கப்பட்ட வலையமைப்பினை கட்டியெழுப்புதன் பொருட்டு தன்னியக்க கூற்றுப் பொறிகளை மேம்படுத்துவதற்காகவும் தற்போதுள்ள முறைகளுக்கு வெளியேயான இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறைகளின் செயற்பரப்பினை விரிவாக்குவதன் மூலம் நாட்டின் கொடுப்பனவு முறையை நவீனப்படுத்தும் முன் மொழிவுகள் மத்திய வங்கியினால் பரீசீலிக்கப்பட்டு வருகின்றன. அதே நேரம் அரச படுகடனுக்கான இரண்டாம் நிலைச் சந்தையின் வளர்ச்சியை ஊக்குவித்து வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மத்திய வைப்பக மற்றும் ஆவண மற்ற முறையொன்றை அறிமுகப்படுத்துவதனூடாக அரசபடுகடன் பிணையங்கள் சந்தையின் நவீனப்படுத்தலை மத்திய வங்கி மேற்கொள்ளவுள்ளது. இம் முயற்சியில் ஊழியர் சேம நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு கூடியளவிற்கு சிறப்பாக பணியாற்றும் விதத்தில் அதன் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக கூடியளவு கவனத்தினை ஈர்க்கும்.

1980களில் நாட்டின் பொருளாதார உபாயங்கள் படிப்படியாக இடம் பெற்றுவந்த மாற்றங்களை அங்கீகரிக்கின்ற விதத்தில், வங்கித்தொழில் துறையில் மேலும் தொழில் நுட்ப முன்னேற்றங்களை அதிகரிக்கும் நோக்குடன் நிறுவப்பட்டுள்ள பங்குக் கம்பனிகளில் பங்கேற்பதற்காக இலங்கை மத்திய வங்கி 1995ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 105 "அ" பிரிவின் கீழ் தேவையான சட்டரீதியான அதிகாரங்களைத் தனக்குப் பெற்றுக் கொண்டது. கைத்தொழில், வர்த்தகம் மற்றும் வங்கித் தொழில் என்பனவற்றில் உலகமயப்படுத்தலில் ஏற்படும் முழு நன்மைகளையும் அடைந்து கொள்வதற்கு, வெளிநாட்டு அபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் வங்கித் தொழில் முறையை நவீனப்படுத்த வேண்டியது இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது என உணர்ந்து கொண்டமையின் நேரடி விளைவே இந்த வழி முறைகளாகும்.

இலங்கையில் முதலீட்டு வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது. மெதுவான வளர்ச்சிக்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக வரவு செலவுத் திட்டத்தினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டுள்ளமையினால் அதிகரித்த பாதுகாப்புச் செலவினங்களின் சூழலில் பொது முதலீடு மெதுவடைந்தது. ஏனைய விடயங்களில் செலவினைக் குறைத்து (உதாரணம் இழப்புக்களை உருவாக்கும் அரசதுறை முயற்சிகளுக்கான மாற்றல்களில் குறைப்பினை ஏற்படுத்தல்) பொது முதலீட்டில் ஓரளவு உயர்ந்த மட்மொன்றினை எய்தியிருக்கக் கூடுமாயின்

அரசியற் பொருளாதாரம் இதற்கு இடமளிக்கவில்லை. இரண்டாவதாக பாதுகாப்பு நிலைமை தொடர்பான நிச்சயமற்ற தன்மைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரண்டினதும் தனியார் முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்தன. மூன்றாவதாக தனியார் முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்யும் வகையில் மிக நீண்ட காலமாகவே இலங்கையின் கடன் வழங்கல் வீதங்கள் 20 சதவீதத்திற்கும் மேலான வீதமொன்றில் காணப்பட்டன. அதி உயர் அரசிறைப் பற்றாக்குறைகள், 1980 – 96 காலப்பகுதியில் 13 சதவீத சராசரியைக் கொண்டிருந்த அதிஉயர் பணவீக்க வீதங்கள் மற்றும் அரச வங்கிகளின் தொழிற்பாட்டுத் திறமையின்மை என்பன வட்டி வீதங்களை உயர்த்தின. 1997 இன் ஆரம்பப் பகுதியில் நாணயக் கொள்கையில் ஓரளவு தளர்த்தல் மற்றும் 1994 – 97 காலப்பகுதியில் அரசிறை நிலைமையில் மேம்பாடு என்பனவற்றின் பின்னர் வட்டி வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் அதி உயர் பணவீக்கம் மற்றும் அதி உயர் வட்டி வீதங்கள் என்பன தொடர்பான மனப்பாங்கு மக்களிடமிருந்து நீங்குவதற்கும் நீண்டகால உண்மை முதலீடு மீண்டும் தொடங்குவதற்கும் பல்லாண்டுகளின் தாழ்ந்த பண வீக்கம் தேவைப்படுகின்றது. அரசிறைப் பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களின் ஒரு சீரான குறைப்பிற்கு இலங்கை இன்னமும் போதுமான அளவு முன்னேறவில்லை. நான்காவதாக வெளிநாட்டுப் பங்கேற்புடன் ஏற்றுமதியினால் வழிநடத்தப்பட்ட கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிக்கும் நோக்கில் 1997இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பின்னர் மரபுவழி பெருந்தோட்டப் பயிர்கள் உட்பட ஏற்றுமதிசாரா அனைத்துத் துறைகளுக்கு எதிராகவும் வேறுபாடு காட்டிய சிக்கலான முதலீட்டு முறையொன்றினை இலங்கை பேணி வந்தது. பக்கச் சார்பு கொண்ட ஊக்குவிப்பு முறை நீண்ட காலமாக நிலவியது. முதலீட்டுச்சபையல்லா ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணய கடன் வழங்கல், முதலீட்டுச் சபைச் சலுகைகளைப் பெறுவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்றுமதிப் பங்கின் தளர்த்தல் உட்பட முதலீட்டுச் சபையல்லாத் துறைக்கானபுதிய இறை ஊக்குவிப்புக்கள் போன்ற வழிமுறைகளின் ஊடாக பலதரப்பட்ட துறைகளுக்கிடையில் ஊக்குவிப்புக்களை வழங்குவதனை சமப்படுத்தவதற்காக புதிய மூலகங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் குறிப்பாக உள்ளேயான தன்மதிப் பிரயோக மூலகங்களை இல்லாதொழிக்கும் நோக்கில் தற்போதைய முதலீட்டு முறை இலகுபடுத்தப்பட வேண்டும். அனைத்துத் துறைகளுக்கும் சமமான ஊக்குவிப்புக்களும், குறுகிய பட்டியல் ஒன்று முதலீட்டை ஊக்குவிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஐந்தாவதாக உட்கட்டமைப்பு வசதிகளின் போதாமை தனியார்துறை முதலீட்டைக் கட்டுப்படுத்தியுள்ளது. வலு மற்றும் தொலைத் தொடர்புத் துறைகளில் கணிசமான மேம்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் கல்வி, சுகாதாரம் என்பனவற்றையும் உள்ளடக்கி உட்கட்டமைப்பின் முக்கிய விடயங்களில் மேலதிக முன்னேற்றம் அவசியமாகின்றது. ஆறாவதாக வர்த்தகக் கொள்கையில் குறிப்பாக விவசாயம் தொடர்பான ஏற்பாடுகள் புலப்பாடுடையதாகக் காணப்படவில்லை. தீர்வையில் அவ்வப்போதை மாற்றங்களும் உரிமம் வழங்கலும் வர்த்தகக் கொள்கையின் எதிர்காலப் போக்குத் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையினை அறிமுகப்படுத்தியுள்ளதோடு உறுதியான முறையில் வர்த்தக வேளாண்மையில் தனியார்துறையின் நுழைவினையும் சிறிய அளவிலான பெருந்தோட்டமல்லா விவசாயத்துறையில் சிறந்த சந்தை இணைப்புக்களை ஏற்படுத்துவதையும் ஊக்கமிழக்கச் செய்துள்ளன. இப்பிரச்சனை இப்பொழுது கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக எஞ்சியிருந்த உரிமங்கள் 1996 இல் இல்லாதொழிக்கப்பட்டதோடு விவசாய உற்பத்திப் பொருட்கள் இப்பொழுது ஆகக்கூடிய 35 சதவீத தீர்வை வீதத்தினுள் வைக்கப்பட்டுள்ளன. விவசாயத்துறையின் பெருமளவு பாதுகாப்புக்கான கோரிக்கைகள் பல கருத்தரங்குகளில் இன்னமும் எழுப்பப்பட்டுள்ளன. விவசாய உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக நம்பத்தகுந்ததும் முரண்படாததுமான விவசாயக் கொள்கையொன்று காணப்படுகின்றது என முதலீட்டாளர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவதற்காக தற்போதைய தாராளமய கொள்கைகளுக்கு பல்லாண்டுகளுக்கான உறுதியான கடப்பாடு தேவைப்படுகின்றது. ஏழாவதாக முதலீட்டாளர்களின் கருத்துக்களுக்கு போதுமான நிறையினை வழங்காத நெகிழ்ச்சியற்ற தொழிற் சந்தையும் கட்டுப்பாடு மிக்க தொழில் சட்டங்களும் தனியார்துறையின் விரைந்த முதலீட்டுக்குப் பாரிய தடையாக இருப்பதாகக் கருதப்படுகின்றது. அடுத்த மூன்றாண்டுகளில் இலங்கை முதலீட்டையும் பொருளாதார வளர்ச்சியையும் விரவுபடுத்த வேண்டுமேயானால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நீண்டகால அமைப்புமுறை விடயங்கள் சில காணப்படுகின்றன.